
கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# பகவத் தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஜுலை 2011 ₹ 15/-





மின் பற்றாக்குறை, தீர்வு உண்டா?



நவீன கல்வியில் உள்ள குறைபாடுகள் யாவை?



மசோதாக்களால் ஊழலை ஒழிக்க முடியுமா?



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 3, இதழ் 7

ஜுலை 2011



2 அபாயகரமான கல்வி

—ஸ்ரீல பிரபுபாதர்

ஆன்மீக அறிவின்றி ஜட அறிவை மட்டும் வளர்ப்பதால் ஏற்படும் அபாயம் குறித்த ஓர் எச்சரிக்கை



6 நவீன கல்வியின் குறைபாடுகள் யாவை?

—சைதன்ய சரண தாஸ்

நல்லொழுக்கத்தையும் நற்பண்புகளையும் கற்றுக் கொடுக்கும் கல்வியே சிறந்த கல்வி

12 மின் தட்டுப்பாடு, தீர்வு உண்டா?

—ஸவ்யஸாசி தாஸ்

மின் பற்றாக்குறை தமிழகத்தின் தற்போதைய முக்கிய பிரச்சனைகளில் ஒன்று. அதற்கான நிரந்தர தீர்வு...



17 மசோதாக்களால் ஊழலை ஒழிக்க முடியுமா?

—ஸ்ரீ கேசவ தாஸ்

எங்கும் ஊழல், எதிலும் ஊழல். தொற்று நோய் போல பரவி விட்ட ஊழலை ஒழிக்க முடியுமா? வெறும் சட்டத்தின் மூலம் ஊழலை ஒழித்துவிட முடியுமா? அது சாத்தியமா?



21 ஜடக் கல்வி உங்களை மேலும் மூடனாகவே மாற்றுகின்றது

—ஸ்ரீல பிரபுபாதர்

ஸ்ரீல பிரபுபாதருடன் தென்னாப்பிரிக்காவில் நடந்த ஓர் உரையாடல்







24 பகவத் கீதை உண்மையுருவில்

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

ஏழாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

10 நரக வாழ்க்கை

16 கேனோ ஹரே க்ருஷ்ண நாம்

29 ஸ்ரீமத் பாகவதம்

# அபாயகரமான கல்வி

### ஆன்மீக அறிவின்றி ஜட அறிவை மட்டும் வளர்ப்பதால் ஏற்படும் அபாயம் குறித்த ஓர் எச்சரிக்கை

*அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் மே 13, 1970 அன்று வழங்கப்பட்ட உரை*

அந்தம் தம: ப்ரவிஷந்தி
யே ’வித்யாம் உபாஸதே
ததோ பூய ஈவ தே தமோ
யா யு வித்யாயாம் ரதா:

“அவித்யாவை (அறிவற்ற நிலையை) வளர்க்கும் செயல்களில் ஈடுபடுவோர் அறியாமையின் இருண்ட பிரதேசத்திற்குச் செல்வர். பெயரளவிலான வித்யாவை (அறிவை) வளர்ப்பதில் ஈடுபட்டிருப்பவர்களோ, அவர்களைவிட மோசமானவர்கள்.”

(ஸ்ரீ ஈஷோபநிஷத், மந்திரம் 9)

கல்வி இருவகைப்படும்: ஜட வித்யா, பிரம்ம வித்யா. ஜட வித்யா என்றால் ஜடக் கல்வி என்று பொருள். பிரம்ம வித்யா என்பது ஆன்மீகக் கல்வியைக் குறிக்கும்.



ஆத்மாவினால் இயங்க முடியும். ஆத்மாவும் ஜடமும் கலந்த கலவையே நமது உடல். மனிதன் அணிந்துள்ள சட்டையும் பேண்ட்டும் அவன் அதனை அணிந்திருக்கும் வரை அவனுடன் இணைந்து இயங்குகிறது. அது போல, உடலானது ஆத்மா இருக்கும்வரை இயங்குகிறது. உடை இயங்குவதுபோலத் தோன்றலாம், ஆனால் மனிதனின் இயக்கமே உடையின் இயக்கமாகத் தோன்றுகிறது. அதுபோல, ஆத்மா இயங்குவதால்தான் உடலும் இயங்குகிறது.

ஓட்டுநர் இயக்குவதால்தான் கார் இயங்குகிறது. கார் சுயமாக இயங்குவதாக முட்டாள்கள் நினைக்கின்றனர். பல்வேறு இயந்திர அமைப்புகளுக்கு மத்தியிலும், கார் தானாக இயங்க முடியாது.

ஜட இயற்கை தானாக வேலை செய்வதாகவும், அஃது ஆச்சரியமான பல விஷயங்களை வெளிப்படுத்துவதாகவும் மனிதர்கள் நினைக்கின்றனர். கடலில் அலைகள் வீசுவதை நாம் காண்கிறோம். ஆனால் அலைகள் சுயமாக வீசுவதில்லை; காற்றுதான் அலைகளை அடிக்கச் செய்கிறது. ஆனாலும் காற்று சுயமாக வீசுவதில்லை. இவ்வாறு நீங்கள் பின்னோக்கிச் சென்றால், அடிப்படை காரணத்தை நோக்கிச் சென்றால், எல்லா காரணங்களுக்கும் காரணமான கிருஷ்ணரைக் காண்பீர்கள். இறுதி காரணத்தை இவ்வாறு தேடுவது தத்துவம் எனப்படுகிறது.

அந்தம் தம: ப்ரவிஷந்தி யே ’வித்யாம் உபாஸதே, என்று இங்கு கூறப்பட்டுள்ளது. அவித்யா என்பது புறச்சக்தியினால் கவரப்பட்ட நபர்களைக் குறிக்கும்; அவர்கள் அவித்யாவை, அதாவது அறிவற்ற நிலையை, அஞ்ஞானத்தை வழிபடுகின்றனர். அஃது அவர்களுக்கு உதவி செய்யாது. கார் எவ்வாறு இயங்குகின்றது, விமானம் எவ்வாறு இயங்குகின்றது என்னும் தொழில் நுட்பத்தை மாணவர்கள் கற்றறிவதற்குப் பெரிய பெரிய கல்விக்கூடங்கள் உள்ளன. மனிதர்கள் பெருமளவில் இயந்திரங்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் இயக்குநரான ஆத்மா எவ்வாறு இயங்குகிறான் என்பதைக் கற்றுத்தரக் கல்விக்கூடம் ஏதுமில்லை. இந்த அறியாமையே அவித்யா, அஞ்ஞானம் எனப்படுகிறது. உண்மையான இயக்குநரைப் பற்றி யாரும் படிப்பதில்லை; அதற்குப் பதிலாக வெளிப்புற இயக்கத்தைப் பற்றி மட்டுமே படிக்கின்றனர்.

மஸசூஸட்ஸ் தொழில்நுட்பக் கல்லூரியில் நான் உரையாற்றியபோது, "இயக்குநரைப் பற்றிப் படிப்பதற்கான தொழில்நுட்பம் எங்கே உள்ளது?" என்று விசாரித்தேன். ஆனால் அவர்களிடம் அதற்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை. திருப்தியான பதிலைக்கூட அவர்களால் அளிக்க இயலவில்லை. இதுவே அவித்யா எனப்படுகிறது.

*அந்தம் தம: ப்ரவிஷந்தி யே 'வித்யாம் உபாஸதே* என்று ஈஷோபநிஷத் கூறுகிறது. பௌதிகக் கல்வியின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், *அந்தம் தம:* இருண்ட பிரதேசத்தினுள் செல்வார்கள். ஆன்மீக முன்னேற்றத்திற்கு உலகின் எந்தவொரு நாட்டிலும் எவ்வித ஏற்பாடும் இல்லை, இந்நிலை மிகவும் அபாயகரமானதாகும். நவீன நாகரிகம் மனித சமுதாயத்தை இருண்ட பிரதேசத்திற்குத் தள்ளிக் கொண்டுள்ளது.

இதுதான் உலகில் நடந்து வருகிறது. செல்வச் செழிப்பான உங்கள் நாட்டில் (அமெரிக்காவில்) சிறந்த கல்விமுறையையும் பலவகைப்பட்ட பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியுள்ளீர். ஆனால் நீங்கள் உருவாக்கும் மக்களின் தரம் என்ன? மாணவர்கள் ஹிப்பிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள், ஏன்?*

"பல்வேறு கல்விக்கூடங்கள் உள்ளபோதிலும் நாம் ஹிப்பிகளை உற்பத்தி செய்வது ஏன்?" என்பதை தலைவர்கள் சிந்திக்க வேண்டும். அவித்யாவை வணங்குவது அறிவுடைமை அல்ல. கௌடீய வைஷ்ணவ ஆச்சாரியர்களில் ஒருவரான பக்திவினோத தாகூர் மிகச் சரியாகப் பாடியுள்ளார்: *ஜட-வித்யா யதோ, மாயார வைபவ, தோமார பஜனே பாதா.* ஜட-வித்யா என்றால் ஜடக் கல்வி. இஃது ஏமாற்றும் சக்தியான மாயையின் விரிவங்கம் என்று அவர் கூறுகிறார். நாம் ஜடக் கல்வியில் முன்னேற முன்னேற, கடவுளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கான அறிவு தடைபடுகிறது. இறுதியில், "கடவுள் இறந்துவிட்டார், நானும் கடவுள், நீயும் கடவுள்" என்று நாம் பறைசாற்றுகிறோம். இவையாவும் அபத்தமானவை.

ஜடக் கல்வியில் முன்னேறுவதன் விளைவு இங்கு சொல்லப்படுகிறது: *அந்தம் தம:. அந்தம்* என்றால் இருள். இருள் இரு வகைப்படும்: ஒளி இல்லாமை, அறியாமை.

பௌதிகவாதிகள் இருளில் தள்ளப் படுவது நிச்சயம், ஆனால் தத்துவ வாதிகள், மனக்கற்பனையாளர்கள், மதவாதிகள், யோகிகள் என்ற பெயர்களில் கிருஷ்ணரைப் புறக்கணிக்கக்கூடிய மற்றொரு பிரிவினரும் உள்ளனர். அவர்கள் அதிக இருளால் சூழப்படுவர்; ஏனெனில், அவர்கள் கிருஷ்ணருக்கு எதிராகச் செயல்படுகின்றனர். அவர்கள் ஆன்மீக அறிவை வளர்ப்பதுபோல பாவனை செய்கின்றனர், ஆனால் கிருஷ்ணரைப் பற்றி, அதாவது, பகவானைப் பற்றி எதையும் அறியாதவர்கள். அவர்கள் தங்களது பெயரளவு கல்வியில் முன்னேற்றம் பெறுவது மிகவும் ஆபத்தானது. அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்து கின்றனர்.

யோகா என்ற பெயரில், "தியானம் செய்யுங்கள், நீங்களே கடவுள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்" என்று இன்றைய உலகில் பிரச்சாரம் செய்வோர் மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்கின்றனர். தியானம் செய்வதால் ஒருவன் கடவுளாகிறானாம். (உள்ளூர நகைக்கிறார்) பாருங்கள்!

கிருஷ்ணர் ஒருபோதும் தியானம் செய்ததில்லை, தியானம் செய்யும் வாய்ப்பை ஒருபோதும் அவர் பெற்றதும் இல்லை. ஏனெனில், அவர்



*கல்வி கற்ற போதும் பண்பாடற்று ஹிப்பிகளாகத் திரியும் அமெரிக்க இளைஞர்கள்*

* ஹிப்பிகள்—சமுதாயத்தின் மீது வெறுப்புற்று போதைப் பொருள்களுக்கும் தவறான பாலுறவிற்கும் அடிமையாகி பித்தனாகத் திரியும் படித்த இளைஞர்கள் ஹிப்பிகள் எனப்படுகின்றனர். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இவர்களின் எண்ணிக்கை அதிகம்.

தோன்றிய ஆரம்பகாலம் முதலே அவரைக் கொல்வதற்கு கம்சன் தயாராக இருந்தான். பின்பு அவரது தந்தை அவரை விருந்தாவனத்திலிருந்த நந்த, யசோதையின் வீட்டிற்கு மாற்றி விட்டார். அங்கும்கூட அவர் மூன்று மாதக் குழந்தையாக உறங்கிக் கொண்டிருந்தபோது, பூதனா என்ற அரக்கி அவரைத் தாக்கினாள்.

> **தான் கடவுளாக மாற வேண்டும் என்பதற்காக கிருஷ்ணர் ஒருபோதும் தியானம் செய்ததில்லை. ஆரம்பத்திலிருந்தே அவர்தான் கடவுள். இதுவே கடவுளை அறியும் முறை.**

கடவுள் என்றுமே கடவுள். நாய் என்றுமே நாய். அதுவே கடவுளை அடையாளம் காணும் வழிமுறை.

“அசைவற்று இரு, அமைதியாக இரு, கடவுளாக மாறு,” போன்ற எண்ணங்கள் அனைத்தும் அபத்தமானவை.

நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்? அமைதியாக இருப்பது சாத்தியமானதா? இல்லை. அது சாத்தியமானதல்ல. இவையாவும் பிதற்றல்களே. நாம் எந்தவொரு செயலுமின்றி அமைதியாக இருக்க முடியாது, ஆசையைத் துறக்க முடியாது. ஆனால் நமது ஆசைகளையும் செயல்களையும் தூய்மைப்படுத்த முடியும். அதுவே உண்மையான அறிவு. கிருஷ்ணருக்கு சேவை செய்வதற்கு மட்டுமே நாம் ஆசைப்பட வேண்டும். இதுவே ஆசையைத் தூய்மைப்படுத்துவதாகும். ஆசையைத் துறப்பது சாத்தியமானதல்ல.

அமைதியாகச் செயலின்றி இருப்பதும் சாத்தியமல்ல. நமது செயல்கள் கிருஷ்ணருக்குச் செய்யப்படும் தொண்டாகவும் கிருஷ்ணரை நோக்கி வழிகாட்டப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அதுவே உண்மையான அறிவு. ஜீவன் என்ற முறையில், செயல்கள், ஆசைகள், அன்பு செலுத்தும் மனப்பான்மை ஆகியவை என்னிடம் எப்போதும் உள்ளன. ஆனால் அவை தற்போதைய நிலையில் தவறாக வழிநடத்தப்படுகின்றன. இவற்றை எங்கு வைக்க வேண்டும் என்பது நமக்குத் தெரிவதில்லை. இதுதான் *அவித்யா*, அறியாமை.

நாம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ஈஷோபநிஷத் போதிக்கிறது. நீங்கள் ஜடக் கல்வியில் முன்னேறக் கூடாது என்று நாங்கள் கூறவில்லை. நீங்கள் அதில் முன்னேறலாம், ஆனால் அதே நேரத்தில் கிருஷ்ண உணர்வுடையவராக மாறுங்கள். இதுவே எங்களது பிரச்சாரம். நீங்கள் கார்களையோ இயந்திரங்களையோ தயாரிக்க வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. “நீங்கள் இந்த இயந்திரத்தைத் தயாரித்துவிட்டீர்கள், சரி. அதை கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபடுத்துங்கள்” என்றுதான் நாங்கள் கூறுகிறோம். இதுதான் எங்களது பிரச்சாரம். நாங்கள் அதை நிறுத்தச் சொல்லவில்லை. பாலுறவு கூடாது என்று நாங்கள் கூறவில்லை. “பாலுறவில் ஈடுபடுங்கள். ஆனால் கிருஷ்ணருக்காக ஈடுபடுங்கள். கிருஷ்ண உணர்வுடைய குழந்தைகளைப் பெறுவதற்காக நூறுமுறைகூட உறவில் ஈடுபடலாம். ஆனால் பூனைகளையும் நாய்களையும் பெற்றெடுக்காதீர்கள்” என்றுதான் நாங்கள் கூறுகிறோம். இதுவே எங்களது அறிவுரை.

கல்வி தேவைதான், ஆனால் அக்கல்வி தவறான பாதைக்கு மாற்றப்பட்டால், அது மிகமிக ஆபத்தானது. பெயரளவிலான கல்வி மதிப்புடையதல்ல. இந்த மந்திரத்தின் பொருள் இதுவே.

(தமிழாக்கம்: இராம கிங்கர தாஸ்)

### இப்பத்திரிகையின் குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *பகவத் தரிசனம்.*

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, இராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை.

**பதிப்பகத்தார் அலுவலகம்:** ஹரே கிருஷ்ண நிலம், ஜுஹு சாலை, மும்பை - 400 049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

# உங்களின் வரிகள்

### மத பேதங்களைக் கடந்த பக்தி

ஜுன் மாத பகவத் தரிசனம் இதழில், திருமதி. கீதா கோவிந்த தாஸி வழங்கிய "ஸ்ரீல ஹரிதாஸ தாகூர்" எனும் திருநாமம் கொண்ட நாமாசாரிய மகானைப் பற்றிய கட்டுரை படிப்பதற்கு மிகவும் பிரமிப்பாக இருந்தது. மத பேதங்களைத் துறந்து தூய்மையான பக்தி தொண்டாற்றுவதே கிருஷ்ண பிரேமையை அடைவதற்கான வழி என்பதை வாழ்ந்து காட்டி நிரூபித்த அந்த மகானைப் போல் நடக்க வேண்டும், அவரது போதனைகளைப் பின்பற்றி தூய வாழ்வு வாழ வேண்டும் என்ற மன உறுதியை இக்கட்டுரை அளித்து விட்டது எனலாம்.

—த.சத்தியநாராயணன், அயன்புரம், சென்னை

### மந்திர ஹீனம் ஏற்படுவதை எவ்வாறு தடுப்பது?

ஜுன் மாத பகவத் தரிசனம் இதழ் வந்தது, போற்றி வைக்கத்தக்க பொருளடக்கத்தைப் பார்க்கும்போது அன்பர்களின் கடும் உழைப்பு தெரிகிறது. அமுதவல்லி தேவி தாஸி உட்பட அன்பர்களின் உழைப்பில் பிழையற்ற பதிப்பை வழங்குவது பெரும் சாதனை. அவர்களது உழைப்பிற்கு தலை தாழ்ந்த வணக்கங்கள்.

**ஒரு கேள்வி:** தற்போதைய இளைஞர்கள், பெரியவர்கள்கூட தங்கள் செல்போனில் ரிங்டோனுக்கும் காலர்டோனுக்கும் மந்திரங்களை வைக்கின்றனர். அழைப்பை எடுக்கும் போது மந்திரங்கள் துண்டுபட்டு, மந்திர ஹீனம் ஏற்படுகிறது. தொடர்ந்து க்ரியா ஹீனம், பக்தி ஹீனம் ஏற்படுகிறது. இது சரியில்லையே.

—இராம. பிரபாகரன், மேல்மனவூர், வேலூர்.

### எமது பதில்

தங்கள் கடிதத்திற்கும் பாராட்டுதலுக்கும் நன்றி. மந்திரங்கள் புனிதமானவை, அவை எல்லாவிடங்களிலும் நேரங்களிலும் கேட்பதற்கு உகந்தவை அல்ல என்றும், பாதியில் துண்டிக்கப்படும்போது மந்திர ஹீனம் ஏற்படுகிறது என்றும் தாங்கள் வருத்தம் தெரிவித்துள்ளீர்கள்.

இதற்குத் தீர்வாக, நாங்கள் கூறுவது என்னவெனில், அன்பர்கள் அனைவரும் "ஹரே கிருஷ்ண" மஹா மந்திரத்தை ரிங்டோனுக்கும் காலர்டோனுக்கும் வைத்துக் கொள்ளலாம். இந்த மஹா மந்திரம் கிருஷ்ணரின் திருநாமங்களைக் கொண்டிருப்பதால், மிகவும் சக்தி வாய்ந்தது என்பது மட்டுமின்றி, இதற்கென்று இடம், காலம் போன்ற நியமங்கள் கிடையாது. மேலும், இதனை ஒருவர் பாதி கேட்டாலும், அதனால் நிச்சயம் பயன் பெறுவர். அதற்கான வாய்ப்பை பலருக்கும் வழங்குவதில் தவறில்லையே.

## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**



## நல்லொழுக்கத்தையும் நற்பண்புகளையும் கற்றுக் கொடுக்கும் கல்வியே சிறந்த கல்வி

*திரு. சைதன்ய சரண தாஸ்*

# நவீன கல்வியின் குறைபாடுகள் யாவை?

“கட்டுப்படும் இயந்திரங்களும் கட்டுப்படாத மனிதர்களும் நம்மிடம் உள்ளன” என்னும் இந்த புதுமொழி தொழில்நுட்பத்தை தவறாக உபயோகிப்பதால் உலகின் பல பகுதிகளிலும் விளையும் பேரழிவின் அபாயத்தை நமக்கு அறிவிக்கின்றன. நவீன சமுதாயத்தின் முக்கிய பிரச்சனையைக் கிண்டலான விதத்தில் இப்புதுமொழி கூறுகின்றது. “உலகம் உங்கள் விரல் நுனியில்” என்று சில விளம்பரங்கள் சொல்லும் அளவிற்கு, கடந்த நூற்றாண்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி ஆச்சரியத்தக்க வகையில் உள்ளது. இஃது ஒருபக்கம் இருந்தாலும், கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வன்முறையைக் காட்டிலும், கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட வன்முறை எட்டு மடங்கு அதிகம் என்று புள்ளியியல் விவரங்கள் தெரிவிக்கின்றன.

### நவீன பள்ளிகளின் அவல நிலை

எனவே, நவீன சமூகத்தில் உள்ள தவறு என்ன என்னும் கேள்வி இங்கு எழுவது சாலச் சிறந்ததே. எல்லா மக்களுக்கும் கல்வி கொடுப்பதற்கான தீவிர முயற்சிக்குப் பின்னும், அறிவியல் முன்னேற்றமானது மக்களுக்கு அமைதியைத் தராதது ஏன்? படிப்பறிவின்மை என்பதை காரணமாக காட்ட முடியாது; ஏனெனில், உலகின் மிகச்சிறந்த பள்ளிகள் மிக மோசமான வன்முறையை கடந்த பத்து ஆண்டுகளில் கண்டுள்ளன. எவ்வித காரணமுமின்றி மாணவ மாணவியரும் ஆசிரியர்களும் தங்களது சக பள்ளிக் குழந்தைகளால் மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்படுவதால் அமெரிக்க சமுதாயத்தின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டுள்ளது. “நவீன காலத்தின் கோவில்” என்று அழைக்கப்படும் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள், துப்பறியும் கருவிகளைக் கொண்டு சோதிக்கப்பட்ட பிறகே பல்வேறு பள்ளிகளில் அனுமதிக்கப் படுகின்றனர்.




வருத்தம் தரும் இந்நிலைக்கான ஆழமான காரணங்கள், பழங்கால இந்தியப் பாரம்பரியத்தின் அறிவுக் களஞ்சியமான வேதங்களில் வழங்கப்பட்டுள்ளன. வேத இலக்கியங்களின்படி, அறிவு என்பது மாற்றத்தை உண்டாக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். “உனக்கு என்ன தெரியும்” என்பதைவிட, “நீ தெரிந்து கொண்ட விஷயங்களால் அடைந்த மாற்றம் என்ன” என்பதே முக்கியமானதாகும். இதற்கு எதிர்மாறாக, நவீனக் கல்வி முறையோ பல்வேறு தகவல்களை மாணவரிடம் திணிப்பதில் ஆர்வம் காட்டுகிறது. ஆனால் நல்ல ஒழுக்கத்தையும் நடத்தையையும்

இக்கல்வி உற்பத்தி செய்வதில்லை. புகைப்பிடித்தல், போதைப் பொருட்கள், தகாத உறவுகள் போன்ற இழிவான விஷயங்களில் பல்வேறு மாணவர்கள் தஞ்சம் அடைகின்றனர்; இவற்றில் சிக்காமல் வெளிவரும் மாணவர்கள்கூட பொருளாதார வசதியை பெருக்கிக் கொள்வதைத் தவிர வேறு எந்த உயர்பலனையும் அடைவதில்லை. "தகவல் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம்" என்ற கோட்பாடுடன் திகழும் நவீன கல்வியில், "இதயப் பரிமாற்றம்" என்பதை யாரும் கவனிப்பதில்லை.

## நாத்திகக் கல்வியில் ஒழுக்கம் எப்படி?

பாடத் திட்டத்தில் இல்லாத பல கலைகளும் செயல்களும் உலகின் பல இடங்களில் ஊக்கமளிக்கப்படுகின்றன என்பது உண்மையே; ஆனால் அவை ஒப்புக்கு சப்பாணி போல உள்ளன. மாணவர்களிடத்தில் நல்ல பண்புகளை உண்டாக்குவதில் அவை பயனற்றவையாக உள்ளன. நற்பண்புகளும் நீதிகளும் ஆன்மீகத்தின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாவிடில் அவை வெறும் வாய் வார்த்தையாக இருக்கும் என்றும் வேத இலக்கியங்கள் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றன. கடவுளே எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார் என்பதைப் புரிந்துகொள்ளாவிடில், ஒழுக்கத்தைக் கொண்டுவருவது சாத்தியமற்றதே! கடவுளை மறுக்கும் நாத்திகனாக ஒருவன் இருந்தால், அவன் தனது புலனின்பத்திற்கான முயற்சியில், நீதியையோ ஒழுக்கத்தையோ பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லையே. தான் ஒரு நித்தியமான ஆத்மா என்பதைப் புரிந்துகொள்ளாதவன், எதைச் செய்தாலும் அதைக் கொஞ்சம் புத்திசாலித்தனமாகச் செய்துவிட்டால், அத்தவறிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பதால், தனது வாழ்வின் சுகத்தைக் கூடியவரை அதிகரிக்க அவன் ஏன் முயற்சி செய்ய மாட்டான்? "பிச்சையெடு, கடன் வாங்கு, திருடு, கொலை செய், ஆனால் ஆனந்தமாக இரு," என்பதே ஆன்மீக விஷயத்தில் அறிவின்றி இருப்பவனின் கொள்கையாக ஆகிவிடுகிறது.

## விஞ்ஞானிகளின் பங்கு

இத்தகு ஆன்மீக அழிவிற்கும் சமுதாய அழிவிற்கும் நவீன விஞ்ஞானக் கல்வியே முக்கியப்பொறுப்பாகும். ஆத்மா, கடவுள் போன்ற ஆன்மீக விஷயங்கள் தங்களின் அறிவிற்கு அப்பாற்பட்டது என்பதை நேர்மையான விஞ்ஞானிகள் உடனடியாக ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அறிவியல் பாடப் புத்தகங்கள் அனைத்திலுமே பல்வேறு போலியான கொள்கைகள் உலகெங்கிலும் புகுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, அதிர்வெடிக் கொள்கை (Big-bang theory), டார்வினின் பரிணாமக் கொள்கை போன்றவை நிரூபிக்கப்பட்ட உண்மைகளாகப் பாடப் புத்தகங்களில் சொல்லித் தரப்படுகின்றன; இதனால் ஒன்றுமறியா அப்பாவி மாணவர்களின் இதயத்தில் நாத்திகக் கொள்கை புகுத்தப்படுகிறது. உலகை விஞ்ஞானப்பூர்வமாகப் பார்ப்பதற்கான ஒரே வழி நாத்திகக் கொள்கையே என்னும் தவறான கருத்து அவர்கள் மனதில் திணிக்கப்படுகிறது. அதிர்வெடிக் கொள்கையையும் டார்வினின் பரிணாமக் கொள்கையையும் விஞ்ஞானப்பூர்வமானதல்ல என்று எத்தனையோ பொறுப்பான விஞ்ஞானிகள் நிராகரித்துள்ளனர், சிலரோ இன்னும் ஒப்புக் கொள்ளாமல் வாதாடி வருகின்றனர். எப்படிப் பார்த்தாலும், இதுவரை நிரூபிக்கப்படாத ஆதாரமற்ற இக்கொள்கைகளை பள்ளிகளின் பாடப் புத்தகங்களில் வைப்பது நிச்சயம் நீதிக்கு புறம்பானதே!

மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்று நம் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள்; அதற்கு நாமும் அனுமதியளிக்கும்போது, அவர்கள் குரங்குகளைப் போல நடந்துகொள்ளக் கூடாது என்று நாம் எதிர்பார்க்கலாமா? உயிர் என்பது வெறும் இரசாயனக் கலவையால் ஆனது என்னும் கருத்து மிகவும் அபாயகரமானதாகும். "வாழ்க்கை இரசாயனங்களின் கலவையே என்றால், இரசாயனப் பை ஒன்றை (விலங்குகளின் உடலை) துண்டுத் துண்டாக வெட்டி, சுவையாக அதனை உண்பதில் என்ன தவறு? மேலும், வாழ்க்கை என்பது இரசாயனத்தை தவிர வேறு எதுவுமில்லை என்றால், எனது வெற்றிப் பாதையில் தடைகளாக இருக்கும் மற்ற



"உயிர் இரசாயனங்களிலிருந்து தோன்றுகிறது" என்னும் விஞ்ஞானிகளின் தவறான பாடங்கள், "மனிதர்கள் வெறும் இரசாயனங்கள் தானே, அவர்களைக் கொன்றால் என்ன தவறு?" என்னும் மனோநிலைக்கு வித்திடுகிறது.

இரசாயனங்களை (மற்ற மனிதர்களை) அழித்துவிடுவதில் தவறு என்ன?'' போன்ற மனநிலையை உருவாக்கி, மாமிசம் சாப்பிடுவதற்கும் கொலை செய்வதற்கும் வழிவகுக்கின்றது. மனித சமுதாயத்தின் தற்போதைய தலைமுறையினர் அனைவருமே இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான கொள்கைகளைப் படித்து வளரும் போது, அமைதி என்பது மனிதனை விட்டுச் சென்று விட்டது என்பதில் ஆச்சரியம் உண்டோ?

## குறைபாடுகளை ஒழிக்க

நம்முடைய பிள்ளைகள் அமைதியான உலகை அமைக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், அவர்களிடத்தில் ஆன்மீக உண்மைகளை எடுத்துரைத்தல் அவசியம். அதன் மூலம் உள்ளும் புறமும் அவர்கள் அமைதியை உணர முடியும். இதைச் சாத்தியமாக்குவதற்கு, கீழ்காணும் மதச்சார்பற்ற தெய்வீகக் கொள்கைகளை உலகெங்கிலும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும்:

* கடவுளே அனைத்து ஜீவராசிகளுக்கும் தந்தை. அவரே பரம ஆளுநர், அனைத்திற்கும் அதிபதி. இது முதன்மையான உபநிஷத் என்று அறியப்படும் ஈஷோபநிஷத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஈஷாவாஸ்யம் இதம் ஸர்வம்)


* நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கடவுளிடம் பதில் சொல்லியாக வேண்டும். (வினை விதைத்தவன் வினை அறுப்பான்)

* நாம் ஆன்மீக ஆத்மாக்கள், கடவுளின் நிரந்தரப் பிள்ளைகள். பௌதிகச் செல்வத்தைச் சேகரிப்பதால் நாம் உண்மையான மகிழ்ச்சியைப் பெற முடியாது. மாறாக, அன்புடன் நாம் நம்மை இயற்கையுடனும் கடவுளுடனும் இணைத்துக் கொள்வதால், அம்மகிழ்ச்சி சாத்தியமாகும்.

இந்த ஆன்மீகக் கோட்பாடுகள் மதச்சார்பின்மைக்கு முரண்பா டானதல்ல. மதச்சார்பின்மை என்பதை நாத்திகம் என்று தவறாகப் புரிந்துகொள்ளவோ விளக்கமளிக்கவோ கூடாது. மதச்சார்பின்மை என்றால், பல்வேறு மதங்களுக்கு மத்தியில் வேற்றுமை பாராமல் இருப்பது என்று பொருள். மேற்கூறிய மூன்று கொள்கைகளை உலகிலுள்ள அனைத்து முக்கிய மதங்களின் போதனைகளிலும் காணலாம். மதச்சார்பின்மை என்ற பெயரில், மக்களை ஆன்மீக அறியாமையில் வைத்து, உலகெங்கிலும் பேரழிவை நாம் விளைவித்தோம் என்றால், அது மிகவும் துரதிர்ஷ்டமானது.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், ஆன்மீக ஞானத்தினால் தனி மனிதனை மட்டுமின்றி சமுதாயத்தையும் மாற்ற முடியும் என்பதை 1960களில் அமெரிக்காவில் நிகழ்த்திக் காட்டினார். அவரளித்த ஆன்மீக ஞானத்தினால் சக்தியளிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள், சுய அழிவை ஏற்படுத்தும் பல்வேறு தவறான பழக்கங்களிலிருந்து விடுபட்டு, சுயநலமற்ற ஆன்மீக சேவகர்களாகவும் இறைவனின் தொண்டில் தம்மை அர்ப்பணித்தவர்களாகவும் மாறினர். உண்மையான ஆன்மீகப் பயிற்சியின் மூலம் பற்பல நற்பண்புகள் மக்களிடையே தோன்றுவதை இன்றும் நாம் நமது அன்றாட வாழ்வில் கண்டு வருகிறோம். நற்பண்புகள் இருந்தால் தானே உலக அமைதியைப் பற்றி யோசிக்க முடியும்! ''தனி மனிதனிடத்தில் தெய்வீக உணர்வை வளர்க்காமல், உலக அமைதிக்காக கதறுவதில் எந்த உபயோகமும் இல்லை,'' என்று ஸ்ரீல பிரபுபாதர் தற்போதைய உலகின் அவசியத் தேவையை குறிப்பிடுகிறார்.

*திரு. சைதன்ய சரண தாஸ் B.E., பூனேயில் உள்ள இஸ்கான் கோவிலில் தொண்டு செய்கிறார், பல்வேறு கட்டுரைகளையும் புத்தகங்களையும் எழுதி வருகிறார்.*



நாம் எத்தகைய கல்வியைக் கற்றாலும், அக்கல்வியின் குறிக்கோள் முழுமுதற் கடவுளைத் திருப்தி செய்வதாக இருக்க வேண்டும். அதுவே வாழ்வின் பக்குவநிலை. அதனால் நாம் நமது வேதியியல் நண்பரான முனைவர். ஸ்வரூப தாமோதர தாஸ் பிரம்மசாரியிடம் உயிர் ஜடத்திலிருந்து வருகிறது என்னும் கொள்கையை முறியடிக்கும்படி கேட்டுள்ளோம். உயிர் ஜடத்திலிருந்து வருகிறது என்பது உண்மையல்ல; மாறாக, ஜடம் உயிரிலிருந்து வருகிறது.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
நிரஞ்ஜனருக்கு எழுதிய கடிதம்,
21 மே, 1973, போர்க்லின்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



## கர்வத்தையும் வெட்கத்தையும் விட்டு திருநாமத்தை பாடுங்கள்

கருமமும் கரும பலனும்
ஆகிய காரணன் – தன்னை,
திரு மணி வண்ணனை, செங்கண்
மாலினை, தேவபிரானை
ஒருமை மனத்தினுள் வைத்து,
உள்ளம் குழைந்து, எழுந்து ஆடி,
பெருமையும் நாணும் தவிர்ந்து
பிதற்றுமின், பேதைமை தீர்ந்தே!


நன்மை தீமை கருமங்களுக்கும் பலன்களுக்கும் ஏவுகின்ற எம்பெருமானை, மாணிக்கம் போன்ற திருமேனியனை, சிவந்த திருக்கண்கள் உடையவனை, நித்திய சூரிகளின் தலைவனை, நெஞ்சிலே வைத்து மனம் குழைந்து எழுந்து ஆடிப் பாடுங்கள். உங்கள் கர்வத்தையும் வெட்கத்தையும் உதறிவிட்டு, அவரது திருநாமங்களை வாய்விட்டுப் பிதற்றுங்கள்.

(நாலாயிர திவ்ய பிரபந்தம், நம்மாழ்வார் 3174)




அசுரர்கள், இவ்வுலகம் பொய்யென்றும், அஸ்திவாரம் இல்லாதது என்றும், கட்டுப்படுத்தும் கடவுள் எவரும் இல்லை என்றும் கூறுகின்றனர். காம இச்சையால் உண்டாக்கப்பட்டதாகவும் காமத்தைத் தவிர இதற்கு வேறு காரணம் இல்லை என்றும் அவர்கள் சொல்கின்றனர்.

—பகவத் கீதையில் (16.8) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்




## கருத்து

**அதிகமான மக்கள் பாவம் செய்யும்போது, நாமும் பாவம் செய்தால், அதில் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று இவ்வுலகிலுள்ள மக்கள் நினைக்கின்றனர். இங்குள்ள பெரும்பாலான நபர்கள், பகவானுக்குச் செய்யப்படும் உண்மையான பக்தித் தொண்டை ஒருபோதும் பொருட்படுத்தாமல் வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ளனர். இதனால், மீதமுள்ள மக்களும் பக்தித் தொண்டைப் பயிற்சி செய்வதில் ஆர்வமின்றி, மற்ற நாத்திகர்களின் பாதை எதுவோ அதே பாதையில் செல்லத் தயாராக உள்ளனர், நல்ல உபதேசங்களை வழங்கும் அரிதான சாதுக்களை அணுகுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. பெரும்பாலான மக்கள் என்ன செய்கிறார்களோ அதையே அவர்களும் செய்கின்றனர். பக்தித் தொண்டை ஏற்பதற்குப் பலர் முன்வராமல் இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.**

அசுரத் தன்மையுடையவனின் எண்ணங்கள்: "நானே எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவன், நானே அனுபவிப்பாளன். நான் பக்குவமானவனும், பலமுடையவனும், மகிழ்ச்சியானவனும் ஆவேன். செல்வாக்கு மிக்க உறவினர்களால் சூழப்பட்ட மிகப்பெரிய செல்வந்தன் நானே. என்னைப் போல சக்தியுடையவனும் மகிழ்பவனும் வேறு யாரும் இல்லை. நான் யாகங்கள் செய்வேன், தானங்கள் கொடுப்பேன், இன்பமாக இருப்பேன்." இத்தகு அறியாமையால் அவன் நரகத்திற்குச் செல்கிறான்.

—பகவத் கீதையில் (16.13–16) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



# மின் தட்டுப்பாடு, தீர்வு உண்டா?



திரு. ஸவ்யஸாசி தாஸ்

மின் பற்றாக்குறை—தமிழகத்தின் தற்போதைய முக்கிய பிரச்சனைகளில் ஒன்று. மற்ற மாநிலங்களிடமிருந்து தினசரி பல கோடி ரூபாய்க்கு மின்சாரம் வாங்கும்போதிலும், தமிழகத்தின் தலைநகரான சென்னை உட்பட அனைத்து நகரங்களையும் கிராமங்களையும் மின் பற்றாக்குறை பாடாய்ப்படுத்துகிறது.

தினசரி அதிகரித்துவரும் நம்முடைய மின் தேவையை சமாளிக்க, அனல் மின் சக்தியை நாம் வெகுவாக நம்பியுள்ளோம், தமிழ்நாட்டில் பெறப்படும் 75 சதவிகித மின்சக்தி அனல் மின்நிலையத்திலிருந்து பெறப்படுவதே. புதிதாக வரவிருக்கும் அனல் மின் நிலையங்களின் மூலம் நமது தேவையை எட்ட முடியும் என்றும், தற்போதைய சூழ்நிலை நிச்சயம் முன்னேற்றமடையும் என்றும், காற்றாலை போன்ற வசதிகளின் மூலமும் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கான திறன் தமிழகத்தில் உள்ளது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, எப்போது மின் பற்றாக்குறை தீரும்? எப்போது தொழிற்சாலைகள் இரவும் பகலும் உழைத்து நமது வர்த்தகத்தை பெருக்கும்? எப்போது நமது எண்ணற்ற வீட்டு உபயோகப் பொருட்களும் இயந்திரங்களும் நமக்கு வசதியை ஏற்படுத்தும்? என்று நாம் நமது கைகளைக் கட்டிக்கொண்டு காத்துக் கொண்டுள்ளோம்.

இதுவே, தமிழகத்தின் மிகப்பெரிய கனவு. 1960களில் இவ்வாறு கனவு கண்ட அமெரிக்கர்களின் கனவு இதுவரை நிறைவேறவில்லை. நான் ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? தயவுசெய்து தொடர்ந்து படியுங்கள், உங்களுக்கே புரியும்.

## உலகையே மிரட்டும் பிரச்சனை

தமிழ்நாடு மட்டுமின்றி மொத்த இந்தியாவும், ஏன் மொத்த உலகமுமே இந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. ஆனால், இதைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் வழங்கப்படாதது ஏன்? ஏனெனில், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் மிகவும் அச்சமூட்டும் வகையில் இருப்பதாலும், இதற்கான தீர்வு யாருக்கும் புலப்படவில்லை என்பதாலும், அவர்களுக்கு இருக்கும் ஒரே வழிமுறை, நெருப்புக் கோழி தனது பகைவனைக் கண்டதும் தலையை மண்ணில் புதைத்துக் கொள்வதைப் போல, நெருக்கடியைப் பற்றி பேசாமல் இருப்பதே.

அமெரிக்க நாட்டிலுள்ள சராசரி குடிமக்கள்கூட இந்த நெருக்கடியையும் இதனால் ஏற்படக்கூடிய விளைவு களையும் பற்றி அறியாத நிலையில் இருக்கும்போது, சராசரி இந்தியனைப் பற்றி என்ன சொல்வது?

“நம் நாட்டு மக்களில், ஐம்பதில் ஒருவருக்குக்கூட நாம் எதிர்கொள்ளவிருக்கும் மிகமுக்கிய பிரச்சனையைப் பற்றி ஏதும் அறியாமல் உள்ளனர்.” —ரோஸ்கோ பார்ட்லெட் (அமெரிக்க விஞ்ஞானி)

“(பெட்ரோல் தீர்ந்த பின்பு) நம்மால் தற்போது யூகித்துப் பார்க்க முடியாத ஒரு புதிய சூழ்நிலையைக் கொண்ட உலகினுள் நாம் நுழைய உள்ளோம்—அந்நாள் வெகு தொலைவில் இல்லை” —கோலின் சம்பேல் (பெட்ரோலிய ஆராய்ச்சி நிபுணர், எக்ஸோன், மொபில், ஷெல் கம்பெனிகளின் ஆலோசகர்)

## மனித சமுதாயத்தை அச்சுறுத்தும் எரிசக்தி பிரச்சனை

சுமார் 150 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய தொழிற்சாலை நாகரிகம், கட்டுக்கடங்காத அதன் பசியைத் தீர்ப்பதற்கான வளங்கள் இல்லாததால், தற்போது இறங்குமுகத்தை அடைந் துள்ளது. பல இலட்சக்கணக்கான வருடங்களாக இயற்கையால் உருவாக் கப்பட்ட வளங்கள் அனைத்தையும்,

இன்றைய சமுதாயம் 150 ஆண்டுகளில் ஏறக்குறைய அழித்துவிட்டது.

175 பேர் கொண்ட அமெரிக்க அரசாங்கத்தின் தேசிய பெட்ரோலிய கழகம், 2007ஆம் ஆண்டில் அமெரிக்க அரசாங்கத்திற்கும் உலகிலுள்ள பெட்ரோலிய நிறுவனங்களுக்கும் விடுத்த அறிவிப்பில், 2015ஆம் ஆண்டிலிருந்து பெட்ரோல், மற்றும் எரிவாயுவின் பற்றாக்குறை ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"பெட்ரோலிய உலகத்தின் இறுதி நாள்களை நாம் எண்ணிக் கொண்டுள்ளோம்." —மைக் பவ்லின், 1999 (அர்கோ நிறுவனத்தின் தலைவர்)

தற்போதைய தொழிற்சாலை நாகரிகத்தில், எண்ணெய் 33 சதவிகிதமும், நிலக்கரி 27 சதவிகிதமும், எரிவாயு 21 சதவிகிதமும் பங்களிக்கின்றன. இம்மூன்றுமே ஒருமுறை தீர்ந்துவிட்டால் மீண்டும் உற்பத்தி செய்ய முடியாதவை.

1950இல் கிங் ஹுப்பர்ட் என்னும் பெட்ரோலிய ஆராய்ச்சியாளர், பெட்ரோலிய பொருள்களின் உற்பத்தி 1970களில் மிகவுயர்ந்த நிலையை எட்டும் என்றும், அதன்பின்னர் படிப்படியாகக் குறைந்து அழிந்துவிடும் என்றும் கூறினார். அவர் கூறியது உலகெங்கிலும் நிறைவேறி வருவதை ஆராய்ச்சியாளர்கள் யாரும் மறுப்பதற்கில்லை.

நிலக்கரியைப் பொறுத்தவரையில், அனைத்து எரிபொருள்களிலும் மிகவும் மோசமானது என்று அறியப்படுகிறது. 43 சதவிகிதம் கார்பன்-டை-ஆக்ஸைடு இதிலிருந்து வெளிவருகிறது. பெட்ரோலியத்தைக் காட்டிலும், நிலக்கரி அதிகளவில் இருப்பினும், சுற்றுப்புற சூழல் காரணமாக அது குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. —EIA எனப்படும் எரிபொருள் தகவல் மையத்தின் கூற்று.

## அதிகரித்து வரும் எரிசக்தி தேவை

உலகளவில் எரிசக்தியின் பயன்பாடு ஒவ்வொரு வருடமும் இரண்டு சதவிகித அளவில் அதிகரித்து வருகிறது. கடைசி இருபது ஆண்டுகளில் எரிசக்தியில் பாதி அளவினை தொழிற்சாலைகள் பயன்படுத்தியுள்ளன என்பது அதிர்ச்சிதரும் தகவல்.

உலக மக்கள் தொகையில் ஐந்து சதவிகிதம் உள்ள அமெரிக்கர்கள், உலகின் எரிசக்தியில் 25 சதவிகிதத்தை பயன்படுத்துகின்றனர். உலக மக்கள் தொகையில் 37 சதவிகித மக்களைக் கொண்ட இந்தியாவும் சீனாவும் தற்போது மேற்கத்திய நாடுகளைப் போன்று வாழ்வதற்கு முயற்சிப்பதால், இவர்களின் தேவை ஆண்டுதோறும் 5 முதல் 6 சதவிகிதம் உயர்ந்து வருகிறது.

எனவே, எப்படிப் பார்த்தாலும் இயற்கை எரிபொருள்கள் கூடிய விரைவில் தீர்ந்துவிடும்.

ஆனால், இயற்கை எரிபொருள்கள் தீர்ந்துபோவதற்கு முன்பு, நிரந்தரமான மாற்று எரிசக்தியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிடுவர் என்று ஒருவர் வாதிடலாம்.

## மாற்று எரிசக்தியின் நிலை

தற்போதைய உலகில் மாற்று எரிசக்திகள் 13 சதவிகிதம் மட்டுமே பயன் தருகின்றன என்றும், அடுத்த இருபது வருடங்களுக்கு இந்நிலையில் மாற்றம் இருக்காது என்றும் எரிபொருள் தகவல் மையம் (EIA) தெரிவித்துள்ளது. அதிக முதலீடு, விலையுயர்ந்த இயந்திரங்கள், தொழில்நுட்ப சவால்கள் போன்றவை இதற்கு காரணங்களாக அமைகின்றன. மேலும், இவற்றிலிருந்து நாம் பெறும் உற்பத்தியை விட செலவு அதிகமாக இருப்பது கவலையைத் தரும் ஒன்றாகும்.

தற்போது குறைவான அளவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் அணுசக்தி நமக்கு கை கொடுக்கும் என்று பேசப்பட்டு வந்தாலும், எரிபொருள் தகவல் மையத்தின் கூற்றுப்படி, இயற்கையின் சீற்றங்கள், தீவிரவாதிகள், கழிவுப் பொருள்கள் முதலிய பிரச்சனைகளால் அணுசக்தியின் அளவு கணிசமாகக் குறையுமேயொழிய அதிகரிக்க வாய்ப்பில்லை.

## அழிவை எதிர்நோக்கும் மின்சக்தி

இதுபோன்ற பல்வேறு பிரச்சனைகளால் மின்சக்தி அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. மற்ற எரிசக்திகளைக் காட்டிலும் மின்சக்தியின் உபயோகம் உலகளவில் இரண்டு மடங்கும், இந்தியாவில் மூன்று மடங்கும் அதிகரிக்கும் என்று கண்டறியப் பட்டுள்ளது. மின்சக்தி என்பது, தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய நாகரிகத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். உலகெங்கிலும் பல்வேறு எரிசக்திகளைப் பெறுவதற்காக சுமார் 800,00,00,000 கோடி ரூபாய் செலவிட வேண்டும் என்றும், அதில் 60 சதவிகிதம் மின்சக்திக்காக என்றும் சர்வதேச அணுமின் நிலையம் அறிவித்துள்ளது. அமெரிக்கா உட்பட கடனில் சிக்கித் தவிக்கும் அனைத்து நாடுகளும் இதனை மாபெரும் சவாலாக கருதுகின்றன. இந்தியாவினால் இச்சவாலை சமாளிக்க முடியுமா? எவ்வளவு பணத்தை நம்மால் இதில் முதலீடு செய்ய முடியும்?

> மின் தட்டுப்பாடு என்பது தொழிற்சாலை நாகரிகத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்று பல்வேறு விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எவ்வளவு தான் மின் உற்பத்தியை அதிகரித்தாலும், மின்சக்தியின் தேவை நிச்சயம் அதைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

## தீர்வு என்ன?

உலக மக்கள் அனைவரின் தேவைக்கும் தகுந்த அளவில் மின்சக்தி உள்ளது, ஆனால் அவர்களின் பேராசைக்கு ஏற்ற அளவில் இல்லை!

மின்சக்தியை செலவிடுவதில் பித்துப்பிடித்து அலையும் தற்போதைய சமுதாயம், தன்னுணர்வை மையமாகக் கொண்டு செயல்படத் தொடங்கினால் இப்பிரச்சனைக்கு முழுமையான தீர்வு ஏற்படும். இல்லையெனில், எவ்வளவுதான் நாம் முயற்சி செய்தாலும், பிரச்சனை தற்காலிகமாக விலகலாம்; ஆனால் நிச்சயம் மீண்டும் வரும்.

உயிர்வாழிகள் ஜடத்திலிருந்து வேறுபட்டவர்கள் என்னும் அறிவை மக்களிடம் புகட்ட வேண்டும், கல்வி மற்றும் கலாச்சார கூடங்களில் இந்த அறிவினைப் புகட்டினால், நமது சமுதாயத்தின் நிலை நிச்சயம் மாற்றம் பெறும், சமுதாயம் தன்னையுணர்ந்த சமுதாயமாக மாறும். ஜடப் பொருள்களின்மீது தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி அடக்கி ஆள்வதற்கான எண்ணம் மக்களிடமிருந்து விலகும். இன்றைய தொழிற்சாலை நாகரிகத்தில் அத்தகு எண்ணம் வேரூன்றியுள்ளதால், சுற்றுப்புற சூழ்நிலை குறித்த பல்வேறு பிரச்சனைகள் மனித சமுதாயத்தை பாதிக்கின்றன.

“நவீன நாகரிகத்தின் அடிப்படைக் கொள்கையே தவறாக உள்ளது. பெயரளவில் முன்னேறியிருக்கும் அறிஞர்கள், அரசியல்வாதிகள் உட்பட அனைவருமே, “நான் இந்த உடல்” என்று எண்ணுகின்றனர். எனவே, அடிப்படைக் கொள்கையே தவறாக இருப்பதால், இவர்களின் நாகரிக முன்னேற்றம் தவறான பாதையில் உள்ளது.”—தெய்வத்திரு அ.ச. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதர்

காமோபபோக-பரமா ஏதாவத் இதி நிஷ்சிதா:

“மனித நாகரிகத்தின் முக்கியத் தேவை புலன்களைத் திருப்தி செய்வதே என்று அவர்கள் (அசுரர்கள்) நம்புகின்றனர்.” (பகவத் கீதை 16.11)

நான் யார் என்பதை அறியாதவர்களும், தங்களைத் தவறாகப் புரிந்துகொள்பவர்களும் புலனின்பத்தின் பாதையிலேயே ஈடுபடுவர் என்பதை இப்பதம் விளக்குகின்றது. உலகின் அனைத்து பிரச்சனைகளுக்கும் இதுவே காரணம்.

இவ்வுலகில் இயற்கையுடன் ஒத்து வாழ்ந்த நமது முன்னோர்கள் பல இலட்சம் வருடங்களாக எதிர்கொள்ளாத பிரச்சனைகளை, இயற்கைக்கு எதிரான, இயற்கையை சுரண்டக்கூடிய நவீன தொழிற்சாலைகளின் காரணத்தினால் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. செயற்கையான ஆடம்பர வாழ்வை நமக்கு வழங்கும் இத்தொழிற்சாலைகளால், நமது அமைதியான வாழ்க்கை சீர்குலைந்துவிட்டது என்பதை சற்றேனும் சிந்திக்கத் தெரிந்த எவரும் புரிந்துகொள்ள முடியும்.

தொழிற்சாலையின் தாக்கம் அதிகம் இல்லாமல், இயற்கையுடன் இணைந்து எளிமையாகவும் இனிமையாகவும் மகிழ்வாகவும் வாழக்கூடிய எண்ணற்றோர் இன்றும் இந்தியாவின் கிராமப் பகுதிகளில் உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, எவ்வித அடிப்படைக் காரணமும் இன்றி, கிராம வாழ்க்கை பின்தங்கிய வாழ்க்கை என்னும் தவறான கருத்துகளை மக்களிடையே பரப்பி, அதன் மூலம் இலாபம் பெறத் துடிக்கும் நகரத்து வியாபாரிகளின் பிரசாரத்தினால், கிராம வாசிகளும் பேராசையை வளர்த்துக் கொண்டு, அமைதியான கிராம வாழ்விலிருந்து நரகம் போன்ற நகர வாழ்விற்கு மாறிவருகின்றனர்.

**நகரத்தில் வசிக்கும் சராசரி மனிதனின் மின்தேவை கிராமத்தில் வசிக்கும் சராசரி மனிதனின் மின்தேவையைக் காட்டிலும் பல மடங்கு அதிகம் என்பதை யார் வேண்டுமானாலும் கணக்கிட்டு அறியலாம். நகர மயமாக்கம் நிறுத்தப்பட வேண்டும். மக்கள் எளிமையாக வாழ்ந்து உயர்ந்த சிந்தனைகளுடன் திகழ வேண்டும். இதுவே இப்பிரச்சனைக்கான நிரந்தர தீர்வு.**

## எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையும்


“எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை” என்னும் கொள்கையுடன் சமுதாயத்தை வடிவமைக்க வேண்டும் என்று இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர் விரும்பினார். தனது சீடர்களைப் பண்ணை நிலங்கள் அமைத்து, தொழிற்சாலைகள் தோன்றுவதற்கு முன்பு ஆயிரக்கணக்கான வருடங்களாக உலகம் முழுவதும் இருந்த மக்கள் வாழ்ந்ததுபோல, எளிமையான வாழ்க்கையை வாழுமாறு அவர் வழிநடத்தினார். மக்கள் தங்களது வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிலத்திலிருந்தும் பசுக்களிடமிருந்தும் பெற்று, தங்களது நேரத்தையும் சக்தியையும் சேமித்து, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று பகவானின் திருநாமத்தை உச்சரித்து, ஆன்மீக இலக்கை அடையும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இதனால் அடையக்கூடிய ஆனந்தத்தினால், ஒருவன் செயற்கையான ஆடம்பர வாழ்க்கையிலிருந்து விடுபடுவது மட்டுமின்றி, மனித வாழ்வின் பக்குவநிலையான இறையன்பையும் அடைய முடியும்.

அத்தகைய சமுதாயத்தில், மின் பற்றாக்குறை உட்பட எந்தவொரு செயற்கையான பிரச்சனைக்கும் இடமில்லை. மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து இறுதியில் இறைவனை அடைய முடியும்.

திரு. ஸவ்யஸாசி தாஸ் M.B.B.S. அவர்கள், சேலம் இஸ்கான் கோவிலில் தொண்டு புரிந்த வண்ணம், விவசாயம், பசு பராமரிப்பு, குருகுலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வேத சமுதாயத்தை நவீன கால மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

(தமிழாக்கம்: சங்கர்)

# ஜுலு மொழியில் ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகம்



புத்தகத்தை ஆர்வத்துடன் படிக்கும் சிறுமி

தென்னாப்பிரிக்காவில் புதிதாக தொடங்கப்பட்ட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் சார்பில், சமீபத்தில் ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகம் ஜுலு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழில் *பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்* என்ற பெயரில் உள்ள இப்புத்தகம், ஜுலு மொழியில் *ங்கலே கொகுஃவ நேதுனா* என்ற பெயரில் டர்பனில் நடைபெற்ற ரதயாத்திரையின் போது முக்கிய மேடையில் வெளியிடப்பட்டது. பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தலைமை நிர்வாகிகளில் ஒருவரான தவத்திரு. ஜெயாத்வைத ஸ்வாமி, இதர சந்நியாசிகளுடன் இணைந்து புத்தகத்தை வெளியிட்டார். ஜுலு பேசும் குழந்தைகளை மேடைக்கு வரவழைத்து, மிகுந்த உற்சாகத்துடன் இருந்த அவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டபோது, கூடியிருந்த மக்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

பத்தாயிரம் பிரதிகள் மட்டுமே அச்சடிக்கப்பட்ட இப்புத்தகத்திற்கு இருக்கும் வரவேற்பைப் பார்க்கும்போது, மேலும் அதிகமான புத்தகங்களை வெளியிடுவது என்பது தென்னாப்பிரிக்காவை கிருஷ்ண பக்தியின் வெள்ளத்தில் ஆழ்த்தும் என்று நம்புவதாக டர்பனிலுள்ள இஸ்கான் கோவிலின் தலைவரான திரு. ஸ்வரூப தாமோதர தாஸ் கூறினார்.



புத்தக வெளியீட்டு விழா மேடையில் சிறுவர் சிறுமியருடன் தவத்திரு. ஜெயாத்வைத ஸ்வாமி (இடது ஓரம்)

## துருக்கிய மொழியில் ஸ்ரீமத் பாகவதம்



துருக்கியில் உள்ள பல்வேறு பக்தர்கள் ஸ்ரீமத் பாகவதத்தினை தங்களது தாய் மொழியில் படிப்பதற்கு ஆவல் கொண்டிருந்தனர். குருவின் கருணையாலும் கௌராங்கரின் கருணையாலும் அவர்களின் நீண்ட நாள் கனவு சமீபத்தில் நிறைவேறியது. ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் காண்டத்தின் முதல் பகுதி, ஹங்கேரியில் நடந்த விழா ஒன்றில், தவத்திரு. சிவராம ஸ்வாமி அவர்களால் வெளியிடப்பட்டது.

இடது: துருக்கிய மொழியில் வெளிவந்த ஸ்ரீமத் பாகவதம் முதல் காண்டத்தின் முதல் பகுதியை தவத்திரு. சிவராம ஸ்வாமி பார்வையிடுதல்

# கேனோ ஹரே க்ருஷ்ண நாம்

## கிருஷ்ண நாமத்தை முறையாக உச்சரிக்க விரும்பும் பக்தனின் ஏக்கம்

**—பக்திவினோத தாகூர்**

கேனோ ஹரே க்ருஷ்ண நாம் ஹரி போ$_3$லே
மனோ ப்ராண் காந்தே நா (பல்லவி)

(பல்லவி) இறைவனின் திருநாமத்தை ஹரே கிருஷ்ண என்று உச்சரிக்கும்போது ஏன் என்னுடைய உள்மனம் அழ மாட்டேன் என்கின்றது?

பகி$_2$ நா ஜானி கோன் அபராதே$_4$
முகே$_2$ ஹரே க்ருஷ்ண நாம் போ$_3$லோ நா (1)

தனது பூர்வ ஜன்மத்தில் என்ன அபராதம் இழைத்தது என்பதை எனது இதயப் பறவை அறியாமல் உள்ளது. (அந்த அபராதத்தினால்) ஹரே கிருஷ்ண நாமத்தை முறையாக உச்சரிக்க இயலவில்லை.

ப$_3$னேர் பகி$_2$ ரே த$_4$ரே ராக்லாம் ஹ்ருதோய் மந்தி$_3$ரே
மது$_4$ மாகா$_2$ ஏய் ஹரி நாம்
பகி$_2$ ரே ஷி$_2$க$_2$ய்லே ஷி$_2$கே$_2$ (2)



ஓ காட்டுப் பறவையே, என்னுடைய இதயம் என்னும் அறையில் மிகவும் பாதுகாப்பாக ஒரு பொருளை உனக்காக வைத்திருக்கிறேன். அது தேனினும் மிக இனிமையான பகவான் ஸ்ரீ ஹரியின் திருநாமம். ஓ பறவையே, இதை உச்சரிப்பதற்குக் கற்றுத் தந்தால் உன்னால் கற்றுக் கொள்ள இயலும்.

பகி$_2$ ஸகல் நாம் போ$_3$ல்தே பரோ
கேனோ ஹரே க்ருஷ்ண நாம் போ$_3$லோ ந
கேனோ ஹரே க்ருஷ்ண நாம் ஹரி போலே மனோ ப்ராண்
காந்தே$_3$ நா (3)

ஒரு பறவையால் எல்லா பெயர்களையும் மிகச் சுலபமாக உச்சரிக்க முடியும்; ஆனால் என் இதயத்திலுள்ள பறவை ஹரே கிருஷ்ண என்று சொல்வதற்கு மறுக்கின்றது. இறைவனின் திருநாமத்தை ஹரே கிருஷ்ண என்று உச்சரிக்கும்போது ஏன் என்னுடைய உள்மனம் அழ மாட்டேன் என்கின்றது?

ச$_2$லோ பகி$_2$ ரூபேர் தே$_3$ஷே$_2$ ஜாய்
ஜே தே$_3$ஷே$_2$தே மனேர் மானுஷ்$_2$ ஆஸா ஜாயா நாய் (4)

ஓ பறவையே, அழியாத அழகும் உண்மையுமான அந்த ஆன்மீக உலகத்திற்கு நாம் இருவரும் செல்லலாம், வா. எனது மனம் என்னும் கற்பனை மனிதன் வந்துபோக இயலாத அந்த இடத்திற்குச் செல்லலாம், வா.

பகி$_2$ ரே தோர் மரண காலேதே
சரபி$_3$ வாஸேர் தோ$_3$லாதே
ஒரே சார் ஜனேதே கன்தே$_4$ கோரே
லோயே ஜாபே$_3$ ஸ்மஷ$_2$ன் கா$_4$டேதே (5)

ஓ பறவையே, மரண காலத்தில் உனது உடலானது மூங்கில் பல்லக்கில் வைக்கப்பட்டு, நான்கு மனிதர்களின் தோள்களால் சுமக்கப்பட்டு, மயான பூமிக்குச் சுமந்து செல்லப்படும்.

ஒரே ஓ தோர் முகே$_2$ ஆகு$_3$னா ஜிஹ்வே துலே
கி கோரோபி$_3$ தாய் போ$_3$லோ நா (6)

அந்தோ! நெருப்பானது உன் வாய்க்குள் நுழைந்து நாக்கு முழுவதையும் பொசுக்கிவிடும். அந்த நேரத்தில் யாரும் உன்னைக் காப்பாற்ற முடியாது. காலம் கடந்துவிட்டது, இனி உன்னால் ஒரு வார்த்தைக்கூட உச்சரிக்க முடியாது.

(தமிழாக்கம்: உஷா)

# மசோதாக்களால் ஊழலை ஒழிக்க முடியுமா?

## ஓர் ஆன்மீகப் பார்வை

*திரு. ஸ்ரீ கேசவ தாஸ்*

இந்தியாவிற்கு இரண்டாவது இடம்தான் கிடைத்துள்ளது. ஒலிம்பிக் போட்டியிலா? சமுதாய முன்னேற்றத் திலா? வல்லரசாக இருப்பதிலா? இல்லை, இல்லை. மிகச்சிறப்பாக ஊழல் செய்தமைக்கு அமெரிக்கப் பத்திரிக்கை வழங்கிய நற்சான்றிதழ். ஊழல், ஊழல், ஊழல்—எங்கும் ஊழல், எதிலும் ஊழல். ஊழலின் தாக்கம், படித்தவன், படிக்காதவன், ஏழை, பணக்காரன், குடிசையில் வாழ்பவன், மாளிகையில் வாழ்பவன் என்று தொடங்கி நாட்டின் மிகப்பெரிய பதவியில் இருப்பவர்களையும் விட்டு வைக்கவில்லை. தொற்று நோய் போல பரவி விட்ட ஊழலை ஒழிக்க முடியுமா? இக்கேள்வி எல்லா சாமானியர்களின் மனதிலும் இயற்கையாகவே எழுந்துள்ளது.

மக்களுக்காகவே வாழ்ந்து மக்களுக்காகவே மடிந்த பல்லாயிரம் மன்னர்களைப் பெற்ற புண்ணிய பூமியாம் பாரதத்தில், அரசாங்கப் பதவியில் உள்ளோர் மத்தியில் இன்று லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுவது வருந்தத்தக்க உண்மை. அண்மையில் ஊழலை ஒழிப்பதற்காக தியாகி ஒருவரும் யோகி ஒருவரும் உண்ணாவிரதம் இருந்தனர். இவ்வளவு கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கும் ஊழலை எவ்வாறு முற்றிலுமாக ஒழிக்க இயலும்?



### சட்டத்தின் மூலம் ஒழிக்க முடியுமா?

ஊழலை ஒழிக்க சட்டம் கொண்டுவர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். வெறும் சட்டத்தின் மூலம் ஊழலை ஒழித்துவிட முடியுமா? அது சாத்தியமா? நிச்சயம் இல்லை. ஏற்கனவே இயற்றப்பட்டு வழக்கில் இருக்கும் பல்வேறு சட்டங்கள் அதன் கடமையைச் செய்ய இயலாமல் உள்ளன என்பதை நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். உதாரணமாக, பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு தடைச்சட்டம் போடப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இன்றும் நம்முடைய வீதிகளும் பேருந்து நிலையங்களும் புற்றுநோயைப் பரப்பும் இடங்களாகத்தான் உள்ளன. ஊழலை ஒழிப்பதற்கு ஏற்கனவே இருக்கும் சட்டங்கள் செயல்படுவதாகத் தெரியவில்லை, புதிய சட்டம் மட்டும் செயல்படப் போகிறதா என்ற கேள்வியை பலரும் எழுப்பி வருகின்றனர்.

சட்டத்தின் மூலம் ஊழலை ஒழிக்க வேண்டுமெனில், சட்டத்தை இயற்றியவர்களும், சட்டத்திற்குட்பட்டு நடப்பதாக கூறி பதவிப் பிரமாணம் செய்து கொண்டவர்களும், சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய நீதிமன்றங்களும், மக்களைக் காக்க வேண்டிய காவல்துறையும், எல்லாவற்றிற்கும் மேலாக லஞ்ச ஊழலை ஒழிப்பதற்காக உள்ள துறையும் தங்களது கடமையை செவ்வனே செய்ய வேண்டியது அவசியம். வேலியே பயிரை மேய்ந்ததுபோல, இவர்களே ஊழலில் ஈடுபடும்போது, சட்டம் என்ன செய்ய முடியும்?

### சட்டம் தேவையில்லையா?

அப்படியெனில், சட்டம் தேவை யில்லையா? கண்டிப்பாக சட்டம்

தேவைதான். சட்டம் என்று ஒன்று இருந்தால் மட்டுமே மக்களிடம் சிறிதளவாவது பயம் இருக்கும். ஆனால் சட்டம் மட்டுமே தீர்வாகி விடாது என்பதே எமது வாதம். சட்டம் இருந்தால், பயம் இருக்கும்—ஊழலில் ஈடுபட மாட்டார்கள் என்று அனைவரும் நம்புகிறோம். ஒருவிதத்தில் அஃது உண்மையே. இருப்பினும், தவறு செய்ய முனைபவர்களை பயம் மட்டும் தடுக்க இயலுமா? பெரும்பாலான நேரங்களில் தன்னம்பிக்கை, பணபலம், ஆள்பலம் போன்றவை பயத்தை முற்றிலும் மறைத்துவிடுகின்றன. எனவே, திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது என்பதற்கு ஏற்ப நமது அரசியல்வாதிகளும் மற்றவர்களும் திருந்தாத பட்சத்தில், சட்டத்தினால் மட்டும் ஊழலை ஒழிக்க முடியாது என்பது உறுதி. சட்டத்தினால் ஊழலைக் குறைக்க முடியலாம், ஆனால் ஒழிக்க முடியாது.

## கல்வியினால் முடியுமா?

ஊழல்வாதிகளைத் திருத்த வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்? முன்னொரு காலத்தில், படித்தவர்கள் ஊழல் செய்ய மாட்டார்கள் என்றும், பொறுப்புடன் செயல்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டு, படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று நினைத்தனர். ஆனால் இன்றைய நிலையில், படித்தவர்கள் தங்களது படிப்பிற்கேற்ப பலமடங்கு ஊழல் செய்வதைப் பார்க்கும்போது, கல்வியினால் ஊழலை ஒழிக்க முடியாது என்று தெரிகிறது.

இருப்பினும், உண்மை என்னவெனில், முறையான கல்வி வழங்கப்பட்டால், அவர்கள் ஊழல் செய்வதிலிருந்து நிச்சயம் விடுபடுவர். கல்வி என்பது ஒருவருக்கு நற்குணத்தை வழங்குவதற்காகவே என்று எத்தனையோ பெரியோர்கள் கூறியுள்ளனர். ஆனால் நவீன காலக் கல்விகற்றநபர்கள் நற்குணங்கள் என்றால், “கிலோ எவ்வளவு?” என்று கேட்கும் நிலையில் உள்ளனர். (நவீன காலக் கல்வியின் தவறுகள் குறித்து அறிய, இப்பத்திரிகையின் இதர கட்டுரைகளைப் படிக்கவும்)

## ஆன்மீகக் கல்வி

கடந்த அறுபது வருடங்களில் நம் பாரத திருநாட்டில் ஒழுக்கக்கேடுகள் பலமடங்கு அதிகரித்துள்ளன. அதிலும் கடந்த பத்து வருடங்களில் நாம் மிகவும் கேவலமான நிலையை எட்டி உள்ளோம். முறையான கல்வி மக்களுக்கு வழங்கப்பட்ட காலத்தில், ஊழல் என்ற ஒன்றை யாரும் கேள்விப்பட்டதில்லை. ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட அக்கல்வி மீண்டும் மக்களுக்கு வழங்கப்பட்டால், மக்கள் பக்குவமான ஒழுக்கத்தை கற்றுக் கொள்வர். தற்போது கல்வி என்ற பெயரில் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுபவற்றில் பெரும்பாலானவை எவ்வித ஆதாரங்களும் இல்லாத பொய்களும் புரட்டுகளுமே. உதாரணமாக, மனிதன் குரங்கிலிருந்து வந்தான் போன்ற ஆதாரமற்ற கற்பனையினை உண்மை என்று போதிப்பதன் மூலமாக ஒன்றுமறியா சிறுவர்களின் இதயங்களில் நாத்திகக் கருத்துகளை திணிக்கிறார்கள். இவ்வித நாத்திகக் கருத்துகளுடன் வளரும் குழந்தையிடம் ஒழுக்கத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தவறு செய்தவன் நாட்டின் சட்டங்களை ஏமாற்றினாலும் இறைவனின் சட்டத்திலிருந்து தப்ப முடியாது என்பதை நமது பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுப்பதில்லை. இறைவனின் சட்டத்தை அறியாதவன் தொடர்ந்து தவறு செய்கிறான். தான் முந்தைய பிறவியில் செய்த கர்ம வினைகளையே தற்பொழுது இன்ப துன்பமாக அனுபவிக்கின்றேன், இப்பிறவியில் செய்யும் தவறுகளுக்காக வரும் பிறவிகளில் துன்பமடைவேன் என்ற அறிவும் எண்ணமும் நவீன காலக் கல்வி கற்பவரிடம் துளியும் இல்லை. இத்தகு உண்மைகள் கற்பிக்கப்படுவதில்லை; ஏனெனில், இறைவன் இருப்பதையும், கர்ம வினைகளின் காரணமாகவே ஒவ்வொருவரும் இன்ப துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக் கொண்டால், இந்த நாத்திக அயோக்கியர்கள் தங்களது புலனின் பத்தை இழக்க நேரிடும். இதனால் கடவுளின் இருப்பை மறுக்கும் அவர்கள், தாங்களும் ஒழுக்கமின்மை என்னும் புதைக் குழியில் விழுந்து, மனித சமுதாயத்தையும் அதனுள் விழச் செய்கின்றனர். இப்படிப்பட்ட நாத்திக மனோநிலை கொண்ட அரசியல்



*பசுவிற்கு நீதி வழங்க தனது சொந்த மகனையே தேரினடியில் ஏற்றிய மனுநீதிச் சோழனை இன்றைய ஆட்சியாளர்களுடன் ஒப்பிடவியலுமோ!*



காமம், கோபம், பேராசை ஆகியவை நரகத்திற்கு கொண்டுச் செல்லும் மூன்று கதவுகளாகும். இவை ஆத்மாவை அழிவுப் பாதையில் நடத்துவதால், ஒவ்வொரு அறிவுள்ள மனிதனும் இவற்றைத் துறக்க வேண்டும்.

—பகவத் கீதையில் (16.21) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

தலைவர்களிடமும் அரசு அதிகாரிகளிடமும் ஊழலற்ற சமுதாயத்தை எதிர்பார்ப்பது நிச்சயமாக நமது தவறே.

## ஆட்சியாளர்களின் கடமை

சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்ட பக்குவமான கல்வி அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். மக்களை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பதை பக்குவமாக அறிந்த நபர்கள் சத்திரியர்கள் எனப்படுகின்றனர். இத்தகு சத்திரியர்கள் மக்களின் நலனைப் பேணும் விதத்தில் ஆட்சி செய்வர். குடிமக்களின் நன்மைக்காக அவர்கள் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பர். அத்தகு மன்னர்களை நாம் வரலாற்றில் கண்டுள்ளோம். ஆனால் இன்றைய மன்னர்களோ (ஆட்சியாளர்களோ) தங்களின் நன்மைக்காக மக்களின் உயிர்களைக் குடிக்கத் தயாராக உள்ளனர். தனது நாட்டின் குடிமகளான ஒரு பசுவின் துயரத்தைப் போக்க தனது சொந்த மகனையே தேரினடியில் இட்ட மனுநீதிச் சோழனையும், தவறான தீர்ப்பு வழங்கிவிட்டேன் என்று தெரிந்தவுடன் அடுத்த கணமே தனது உயிரைத் தியாகம் செய்த பாண்டிய நெடுஞ்செழியனையும் நினைவில் கொள்வோமாக.

“தனது நாட்டின் குடிமக்களை பிறப்பு இறப்பு என்னும் துன்பத்திலிருந்து விடுவிக்க முடியாவிடில் ஒருவன் மன்னனாகக் கூடாது.” (ஸ்ரீமத் பாகவதம் 5.5.18)

குடிமக்களுக்கு நல்ல வசதிகளை செய்து கொடுத்தால் மட்டும் போதாது. அந்த வசதிகளால் அவர்கள் நரகத்தை நோக்கிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். பாவ காரியங்களில் ஈடுபடாமல் அவர்களைக் காத்து, ஆன்மீகப் பாதையில் வழிநடத்த வேண்டியதும் ஆட்சியாளர்களின் கடமையாகும். குடிமக்கள் செய்யும் பாவங்களின் ஒரு பகுதியை அரசன் ஏற்க வேண்டும் என்பதை அவர்கள் அறிய வேண்டும். மன்னனாக, ஆட்சியாளராகச் செயல்பட விரும்புவோர் தத்தமது கடமைகளை முறையாக அறிந்து செயல்படுதல் அவசியம். நீதியற்ற அரசர்கள் தகுதி வாய்ந்த பிராமணர்களால் பதவியிறக்கம் செய்யப்பட்ட உதாரணங்களை ஸ்ரீமத் பாகவதத்தில் நாம் காணலாம்.


வேத கால மன்னர்கள் தங்களுடைய உடலும் புலன்களும் பலமாக இருந்தபோது மட்டுமே ஆட்சி செய்தனர். உடல் பலவீனமடையத் தொடங்கும்போது, அவர்கள் காட்டிற்குச் சென்று ஆன்மீகச் செயல்களில் முழுமையாக ஈடுபட்டு தன்னுணர்வை வளர்த்துக் கொள்வர். ஆனால் நவீன கால ஆட்சியாளர்களோ தங்களது வாழ்நாளின் இறுதிவரை பதவியில் ஒட்டிக் கொள்ள விரும்புகின்றனர். மன்னர்களாக இருப்போர் மக்களுக்கு உதாரணமாக வாழ வேண்டும் என்று பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். அதன்படி, மக்களுக்கு முன்னுதாரணம் அமைப்பதற்காக, 50 வயது வந்தவுடன் அரியணையை மற்றவர்களுக்கு வழங்கிவிட்டு ஆன்மீகச் செயல்களில் ஈடுபட வேண்டியது மன்னரின் கடமை. எல்லா வேலைகளுக்கும் வயது வரம்பு இருக்கும்போது, அரசியலுக்கு மட்டும் வயது வரம்பு இல்லாதது ஏன்?

## ஆட்சியாளர்களுக்கு கல்வி அவசியம்

யார் எந்த வேலையில் சேர முன்வந்தாலும், அவரிடம் கேட்கப்படும் முதல் கேள்வி, “நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்?” வேறு விதமாகக் கூறினால், ஒவ்வொரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட கல்வி அவசியம். ஆனால் நம்நாட்டில் அரசியலில் ஈடுபடுவதற்கு மட்டும் எந்தவொரு தகுதியும் அவசியமில்லை, நாட்டின் குடிமகனாக இருந்தால் மட்டும் போதும் என்று




வயதான பின்னர், ஆன்மீகத் திருப்பணிக்குச் சென்ற சத்திரியர்கள் வாழ்ந்த நாட்டில், ஆட்சிமன்றத்திற்குச் செல்லும் நவீன அரசியல்வாதிகள் ஆன்மீக அறிவை என்று அடைவார்களோ, அன்றுதான் ஊழல் ஒழியும்.



நான் கவர்னரை சந்தித்தபோது, வர்ணாஷ்ரம கல்லூரி திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். மருத்துவர்களுக்கு, பொறியியல் வல்லுனர்களுக்கு, என எல்லா துறைகளுக்கும் நாம் பயிற்சி கொடுப்பதுபோல, ஒருவனை பிராமணனாகவோ சத்திரியனாகவோ ஆக்கு வதற்கு நாம் பள்ளிகளையும் கல்லூரி களையும் திறக்க வேண்டும்.

—தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
4 ஏப்ரல், விருந்தாவனம்

கூறுவது எவ்விதத்தில் நியாயம்? பேராசையுடன் இருக்கும் தகுதியற்ற ஆட்சியாளர்கள் துளியும் இரக்கமின்றி திருடர்களாகச் செயல்படுவர் என்றும், மக்கள் அவர்களுக்கு பயந்து ஓடி ஒளிவர் என்றும் கலி யுகத்தின் நிலையை ஸ்ரீமத் பாகவதம் (12.2.8) எடுத்துரைக்கின்றது.

சத்திரியர்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் நாட்டில் பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் விரும்பினார். ''வர்ணாஷ்ரம கல்லூரிகள் உடனடியாக எல்லாவிடங்களிலும் நிறுவப்பட வேண்டும். அக்கல்லூரிகளின் மூலம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என அனைவருக்கும் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். ஆன்மீகப் பயிற்சிகளினால் அவர்கள் அனைவரும் ஆன்மீகத் தளத்திற்கு உயர்வு பெற முடியும்.'' (தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 12 மார்ச், 1974, விருந்தாவனம்)

## இறுதியாக

பாரதப் பண்பாட்டினை உலகெங்கிலும் எடுத்துச் சென்றவரும், அப்பண்பாட்டினை இந்தியர்கள் கைவிடக் கூடாது என்று தீவிரமாக பிரச்சாரம் செய்தவருமான அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர், பாரதத்தின் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களை சந்தித்தபோது, பேச நினைத்த கோரிக்கைகளில் சில,

* குறைந்தபட்சம் 500 வெளிநாட்டு பக்தர்களுக்குக் குடியேற்ற உரிமை.

மேலை நாட்டினர் இந்தியாவிற்கு வந்து பாரதப் பண்பாட்டை கற்றுக் கொள்வதன் மூலம், இந்தியாவிலும் உலகத்திலும் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் விரும்பினார். உலக மக்கள் பரவலாக ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடும்போது, ஊழலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பில்லை.

* அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிராமண தீட்சை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

பிராமண தீட்சை பெற்றவர்கள் என்றால், முறையான கல்வி கற்று நாட்டை வழிநடத்துவ தற்குரிய தகுதி பெற்றவர்கள் என்று பொருள். (பிறப்பினால் பிராமணர்களாகக் கருதப்படுபவர்கள் இங்கு ஊக்குவிக்கப்படுவதில்லை; மாறாக, பகவத் கீதையில் (4.13) கூறப்படுவதுபோல குணத்தினாலும் கர்மத்தினாலும் பிராமணராக இருப்பவரே உண்மையான பிராமணர்) கிருஷ்ண உணர்வின் அனைத்து நெறிகளையும் கடைப்பிடிக்கும் இந்த உறுப்பினர்களிடையே ஊழலுக்கு வழியில்லை.

* எல்லா அரசாங்க ஊழியர்களும் ஒரு நாளில் இருமுறையேனும் நாம சங்கீர்த் தனத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

மக்கள் அனைவரிடமும் நாம சங்கீர்த்தனம் பரப்பப்பட வேண்டும் என்றபோதிலும், அரசாங்க ஊழியர்களுக்கு அதை கட்டாயமாக்குதல் வேண்டும். சுயநலத்தாலும் ஊழலாலும் அரசாங்கம் சீரழிக்கப்படுவதை நிறுத்தும்வரை இந்தியாவினால் முன்னேற முடியாது. அரசாங்க அலுவலர்கள் ஹரே கிருஷ்ண கீர்த்தனம் செய்து, இறைவனின் சார்பில் மக்களின் நலனுக்காக நாட்டை நிர்வாகம் செய்ய உதவ வேண்டும்.

மிகவும் ஆற்றல் வாய்ந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமங்களை உச்சரிப்பதால், மக்கள் தூய்மையான மனதையும் தூய்மையான பழக்கங்களையும் நிச்சயம் பெறுவர். மாமிசம், போதை வஸ்துகள், சூதாட்டம், தவறான பாலுறவு ஆகிய பாவச் செயல்களில் ஆர்வமிழக்கும் இவர்கள், பாரதத் திருநாட்டின் முதுகெலும்பாகவும் சிறந்த குடிமக்களாகவும் மாறுவர்.

உலகமெங்கும் கிருஷ்ண உணர்விற்கு ஆதரவளித்து, கிருஷ்ண சிந்தனையை வளர்க்கும் பொறுப்பை இந்திய அரசு ஏற்றால், உலகளவில் மக்களின் எண்ணங்களில் ஒரு புரட்சியையும் மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும். ஞானத்திலும் பண்பாட்டிலும் ஆன்மீக வழிகாட்டுதலிலும் இந்தியாவை தலைமையாக ஏற்க அனைத்து உலக நாடுகளும் தயாராக உள்ளன. இந்தியா தயாரா?

*திரு. ஸ்ரீ கேசவ தாஸ் அவர்கள், ஓவியராகவும் வடிவமைப்பாளராகவும் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை சென்னையில் பயிற்சி செய்து வருகிறார்.*



# ஜடக் கல்வி உங்களை மேலும் மூடனாகவே மாற்றுகின்றது

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவரின் சீடர்களுக்குமிடையே, தென்னாப்பிரிகாவில் உள்ள ஜோகனஸ்பர்க் நகரில் 18 அக்டோபர் 1975இல் நிகழ்ந்த உரையாடல்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** மான்ட்ரியலில், வங்காளத்தைச் சார்ந்த ஒருவர் என்னிடம், "சுவாமிஜி, முட்டாள்கள், அயோக்கியர்கள் போன்ற கடுமையான வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்துகின்றீர்கள், வேறு வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாதா?" என வினவினார். அதற்கு நான், "நீங்கள் முட்டாளாகவும் அயோக்கியனாகவும் இருப்பதால், இவ்வார்த்தைகள்தான் பொருத்தமானவை," என்று பதில் கூறினேன்.

**சீடர்:** ஸ்ரீல பிரபுபாதரே, யாரெல்லாம் ஜடவுடலைப் பெற்றுள்ளார்களோ, அவர்கள் அனைவரும் அயோக்கியர்கள் என்று தாங்கள் ஒருமுறை கூறியுள்ளீர்கள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அயோக்கியன். ஆம். இவ்வுடலை நம்மால் நிரந்தரமாக வைத்துக்கொள்ள இயலாது என்று அறிந்திருந்தும், அவர்கள் அதற்காக முயல்கின்றனர். இவ்வுடலை நீண்டகாலத்திற்கு நம்மால் காப்பாற்றிட இயலாது. இருப்பினும், புன: புனஸ் சர்வித சர்வானாம் (மென்றதையே மெல்லுதல்), இம்மூடர்கள் இயலாத ஒன்றை அடைவதற்கு முயல்கின்றனர். எது இயலாததோ, எதற்கு அனுமதியில்லையோ அதற்காக முயல்கிறார்கள்.

**சீடர்:** உடலை நிரந்தரமானதாக வைத்துக் கொள்வதற்கான தங்களது முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்படும் என்பதை மக்கள் ஏற்கவில்லை என்று தோன்றுகின்றது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அவர்களது முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்படுவதை அவர்கள் பார்த்துக் கொண்டும், அனுபவித்துக் கொண்டும் உள்ளனர். எந்த ஒரு மனிதனும் மரணமற்ற நிலையை அடைந்ததாக வரலாற்றில் இல்லை. ஹிரண்யகசிபு போன்ற மிகப்பெரிய அசுரர்கள்கூட மரணமற்ற நிலையை அடைய முடியவில்லை. இன்றைய சிறிய அசுரர்களைப் பற்றி என்ன சொல்வது? ஓர் உதை போதும்—இவர்கள் இறந்துவிடுவர்.

**சீடர்:** ஸ்ரீல பிரபுபாதரே, மக்கள் அனைவரும், குறிப்பாக அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் அயோக்கியத்தனமான எண்ணங்களையும் அயோக்கியத்தனமான நாகரிகத்தையும் அதிகம் பின்பற்றுபவர்களாக உள்ளனரே, அஃது எவ்வாறு?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏனெனில், அவர்கள் ராட்சசர்களாக உள்ளனர். அவர்கள் மாமிசம் உண்கின்றனர், மது அருந்துகின்றனர், தகாத உடலுறவில் ஈடுபடுகின்றனர்—இது ராட்சசர்களின் பண்பாடு. ஹிரண்யகசிபுவின் பண்பாடு. *ஹிரண்ய* என்றால் "தங்கம்" என்றும், *கசிபு* என்றால் "மிருதுவான படுக்கை" என்றும் பொருள்படும். இவற்றை எவ்வாறு அடைவது என்பதைக் கற்றுக் கொள்வது அசுரர்களின் பண்பாடாகும். இம்மக்கள் மிருதுவான படுக்கையையும் தங்கத்தையும் தேடுகின்றனர்; அதாவது, உடலுறவையும் பணத்தையும் மட்டுமே தேடுகின்றனர்.

இவர்கள் எதற்காக முயற்சி செய்கிறார்களோ, அஃது இயலாததாகும். ஆனாலும் அவர்கள் இதற்காக முயல்கின்றனர். எப்படிப் பார்த்தாலும், இந்த ஜடவுடலை நிரந்தரமானதாக மாற்ற முடியுமா என்ன? ஆனால் இந்த முட்டாள்கள், "முடியும், நாங்கள் முயல்கின்றோம். தற்பொழுது நோய்கள் குறைந்துள்ளன, நாம் தற்போது அதிகமான ஆண்டுகள் வாழ்கிறோம்," என்று கூறுவர். இவையனைத்தும் மூடத்தனமான வார்த்தைகள். "இல்லை, இது முடியாது" என்று அவர்கள் ஒருபோதும் கூறமாட்டார்கள். மாறாக, தங்களின் அயோக்கியத்தனமான முயற்சிகளை தொடர்ந்து போற்றிக் கொண்டேயிருப்பர்.

நவீன விஞ்ஞானத்தில் அவர்கள் அடைந்த உண்மையான முன்னேற்றம் என்ன? இதைத்தான் நாம் எடுத்துரைத்து வருகிறோம். இந்த பெயரளவு விஞ்ஞானிகளும் இதர தலைவர்களும் மக்களைத் தவறாக வழிநடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக ஸ்ரீல பக்திவினோத தாகூர் ஒரு பாடல் எழுதியுள்ளார். *ஜட-வித்யா ஜதோ, மாயார வைபவ. ஜட-வித்யா* என்றால் "ஜடக் கல்வி." ஜடக் கல்வி என்பது மாயையின் விரிவு எனப்படுகிறது. இதுவே அறியாமை எனப்படுகிறது. இதன் முடிவு என்னவெனில், *தோமார பஜனே பாதா*, மக்கள் கடவுளை மறந்துவிடுவர். ஜடக் கல்வியில் வளர்ச்சியடைவதன் முடிவு, மக்கள் கடவுளை மறப்பதே.

அடுத்ததாக, *மோஹ ஜனயே, அனித்ய ஸம்ஸாரே.* "நிரந்தரமாக வசிக்க இயலாத ஜடவுலகில் நான் ஏற்கனவே மாட்டிக் கொண்டுள்ளேன். இந்த ஜடக் கல்வியோ என்னை இதில் மேலும் சிக்க வைத்து, கழுதையைப் போல வேலை செய்ய வைக்கும்."

இப்பொழுது கூறுங்கள், ஸ்ரீல பக்திவினோதர் சொல்வது சரியா, தவறா? ஜடக் கல்வியில் முன்னேற்றம் என்பது, மாயையின் முன்னேற்றம் என்று அவர் கூறுகிறார். "இதில் என்ன தவறு?" என்று நீங்கள் வினவலாம். "நீங்கள் ஏற்கனவே அயோக்கியர்கள், இந்த ஜடக் கல்வி உங்களை மேலும் அயோக்கியனாக மாற்றும்." *மோஹ ஜனமியா, அநித்யா ஸம்ஸாரே:* "நான் ஏற்கனவே தற்காலிகமான ஜடவுலகினுள் பீடிக்கப்பட்டுள்ளேன். இவை என்னை மேலும் ஆழமாக நன்றாக சிக்க வைக்கின்றன." இதுவே பக்திவினோதரின் கூற்று. இவற்றை உங்களால் ஏற்க முடியாவிடில், எனக்கு காரணம் கூறுங்கள்.

ஏற்கனவே ஜடத்தில் சிக்கியுள்ள நாம், இந்த ஜடக் கல்வியின் முன்னேற்றத்தால் மேலும் அதிகமாக சிக்கிக் கொள்கிறோம் என்னும் பக்திவினோத தாகூரின் வார்த்தைகளுக்கு உங்கள் விடை எங்கே? எவரேனும் அவரின் வார்த்தைகளைப் பொய் என்று நிரூபிக்க இயலுமா?

**சீடர்:** இந்த ஜட அறிவு இல்லாவிட்டால், பக்திவினோத தாகூர் கூறுவதைக்கூட கற்றுணர இயலாது என்று எவரேனும் வாதிடலாம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நாங்கள் கல்விக்கு எதிரானவர்கள் என்று யார் கூறியது? எத்தகைய கல்வி என்பதுதான் தற்போதைய கேள்வி. பக்திவினோத தாகூரிடமிருந்து கற்றால் அதுதான் உண்மையான கல்வி.

நீங்கள் பக்திவினோத தாகூரிடமிருந்தும் வியாசரிடமிருந்தும் கற்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் நீங்கள், டார்வின், ஃப்ராய்ட் போன்ற அயோக்கியர்களிடமிருந்து கற்பது ஏன்? கல்வி என்றால், யாரொருவர் தெய்வீக அங்கீகாரம் பெற்றுள்ளாரோ, யாரொருவர் குறைகளற்றவரோ, யாரொருவர் அறியாமைக்கு அப்பாற்பட்டவரோ, யாரொருவர் நம்மை ஏமாற்ற மாட்டாரோ, அத்தகைய நபரிடமிருந்து கற்பதாகும். நாங்கள் கிருஷ்ணரிடமிருந்து கற்கிறோம், இதுவே கல்வி. ஆனால் நீங்கள் முட்டாள்களிடமிருந்தும் அயோக்கியர்களிடமிருந்தும் கற்றால், அஃது எத்தகைய கல்வி? கல்வி என்றால் கற்றறிந்தவரிடமிருந்து கற்பதே.

கல்வி அவசியம், ஆனால் உண்மையான கல்வியே அவசியம், ஏமாற்றுக் கல்வி அல்ல. ஆனால் நம்மை ஏமாற்றும் தற்போதைய நவீன காலக் கல்வி, உடலுக்காக உழைக்கும்படி நமக்கு கற்றுத் தருகிறது. நாம் இந்த உடலே அல்ல என்னும்போது, இது கல்வியா, ஏமாற்றுவேலையா?

ஒவ்வொருவரும் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் கல்வி கற்பதால், இஃது ஏமாற்றுவேலை அல்ல என்று நீங்கள் கூறலாம். ஆனால் இது தினமும் குழாயைத் திறந்து சட்டையையும் கோட்டையும் மட்டும் அலசுவதைப் போன்றது. அஃது அறிவான செயலா?

"உங்களுக்காக நீங்கள் என்ன செய்கிறீர்? உணவு உண்கிறீர்களா, இல்லையா?"

"என்னைப் பற்றியோ, எனது உணவைப் பற்றியோ எனக்குக் கவலையில்லை. தினமும் நான் எனது சட்டையையும் கோட்டையும் தூய்மை செய்கிறேன்." (சட்டையையும் கோட்டையும் கவனமாகப் பராமரித்து உடலைப் பராமரிக்காமல் விட்டுவிட்டால், அஃது அறிவல்ல. அதுபோல உடலை மட்டும் பராமரித்து ஆத்மாவைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால், அஃது அறிவல்ல)

இதுவா கல்வி? நீங்கள் பசியால் வாடுகிறீர்கள், ஆனால் சட்டையையும் கோட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்கிறீர்கள். இதுவா கல்வி? இல்லை, இது கல்வியல்ல. ஆனால் இதுவே கல்வி என்ற பெயரில் கற்கப்படுகிறது. எனவே, மக்கள் அமைதியின்றி உள்ளனர். அவர்கள் அனைவரும் பஞ்சத்தில் உள்ளனர். அவர்களின் கார்களும் விண்ணை முட்டும் கட்டிடங்களும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமா? அவை மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்றால், அவர்கள் தற்கொலை செய்துகொள்வது ஏன்? அவர்களிடம் மகிழ்ச்சி இல்லை, ஆத்மாவிற்கான உணவு இல்லை.

இதுவா கல்வி? இல்லை. ஜடக் கல்வி அனைவரையும் மேன்மேலும் கழுதையாக மாற்றுகின்றது என்ற பக்திவினோத தாகூரின் வார்த்தைகள் உண்மையே. ஜடவுலகில் இருப்பவர்கள்

> ***மக்கள் அமைதியின்றி உள்ளனர். அவர்களின் கார்களும் விண்ணை முட்டும் கட்டிடங்களும் அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்குமா? அவை மகிழ்ச்சியை கொடுக்கும் என்றால், பலர் தற்கொலை செய்துகொள்வது ஏன்? அவர்களிடம் மகிழ்ச்சி இல்லை. ஏனெனில், ஆத்மாவிற்கான உணவு இல்லை.***

அனைவருமே கழுதையைப் போன்று உள்ளனர்; இக்கல்வி மக்களை மேலும் கழுதையாக மாற்றுகிறது.

**சீடர்:** ஸ்ரீல பிரபுபாதரே, ஒருவன் இவ்வுடலை விட்டு வேறொரு உடலை ஏற்கும் போது, அவன் அனைத்தையும் முதலிலிருந்து தொடங்குகின்றானா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. அவன் எந்த உடலைப் புதிதாக ஏற்கின்றானோ, அதற்கேற்ப அவன் செயல்படத் தொடங்குகிறான். ஒருவன் நாயின் உடலை ஏற்கும்போது, அவன் நாய் போன்று செயல்படுகிறான்; மரத்தின் உடலைப் பெறும்போது, மரம் போன்று செயல்படுகிறான், ஆடைகளின்றி வெட்கமின்றி நிற்கின்றான். அவனது உடலின் அங்கங்களை (கிளைகளை) வெட்டும்போதுகூட, தடுக்க முடியாமல் நிற்கின்றான்.

இயற்கையின் இந்த சட்டங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நவீன காலத்தின் பெயரளவு கல்வியாளர்களுக்கு இந்த விஞ்ஞானத்தைப் பற்றி என்ன தெரியும்? *ததா தேஹாந்திர ப்ராப்தி:* "மரணத்திற்குப் பிறகு வேறு உடலை எடுக்க வேண்டும்," (பகவத் கீதை 2.13) என்று கிருஷ்ணர் கூறுகின்றார். அடுத்த உடல் இதுதான் என்று அவர் அறுதியிட்டுக் கூறவில்லை. ஏனெனில், உங்களின் தற்போதைய செயல்களே அடுத்த உடலைத் தீர்மானிக்கும்.

நடைமுறை அனுபவத்தில்கூட இலட்சக்கணக்கான உயிரினங்கள் இருப்பதை நீங்கள் உணரலாம். 84,00,000 வகையான உடல்கள் உள்ளன. அதில் ஏதேனும் ஒன்றினுள் நாம் செல்ல வேண்டும். நீங்கள் என்ன செய்ய முடியும்? இயற்கை உங்களை "இந்த உடலினுள் செல்" என்று பலவந்தப்படுத்தும்போது, உங்களால் என்ன செய்ய முடியும்?

அந்த உடல் தற்போதைய உடலைக் காட்டிலும் சிறந்ததாகவும் இருக்கலாம், அருவருப்பானதாகவும் இருக்கலாம். ஆனால் நீங்கள் உடலை மாற்றியே ஆக வேண்டும். "மரணத்திற்குப் பின் நான் வேறு உடலை அடைய வேண்டும், எத்தகைய உடலை அடையப் போகிறேன் என்பதில் நான் கவனமாக இருக்க வேண்டும்," என்று நினைவுபடுத்தும் கல்வி நிறுவனம் எங்கே? எங்கே அந்த கல்வி நிறுவனம்? பெயருக்காகச் செயல்படும் இந்த கல்வியாளர்கள் அனைவரும் குருடர்களே. உண்மையான ஆன்மீக விஷயங்களைக் கற்றுத் தரும் கல்வி நிறுவனங்கள் அவசியம்.

(தமிழாக்கம்: ஜெய கிருஷ்ண தாஸ்)

# காஷ்மீரில் ஹரிநாம சங்கீர்த்தனம்

விருந்தாவனத்தை மையமாகக் கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்று ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை விநியோகம் செய்யும் பக்தர்கள், திரு. ஜானகிநாத் தாஸ் என்பவரின் தலைமையில் சமீபத்தில் காஷ்மீருக்குச் சென்றனர். ஸ்ரீநகரின் வாயிலை அவர்கள் அடைந்தபோது, இராணுவ சோதனை மையத்தில் இருந்தவர்கள், ஹரே கிருஷ்ண என்று எழுதப்பட்டுள்ள வாகனத்துடன் உள்ளே செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினர். யாரேனும் கோபம் கொண்டு தாக்க முற்படலாம் என்பதால், வண்டியை இராணுவ முகாமில் நிறுத்திவிட்டு டாக்ஸி ஒன்றை பிடித்துச் செல்லும்படி கூறினர். டாக்ஸியில் ஸ்ரீநகரை அடைந்த பக்தர்கள், சுதர்ஸன தாஸ் அவர்களின் தலைமையில் அங்குச் செயல்படும் சிறிய இஸ்கான் மையத்திற்குச் சென்றனர். சிறிது நேரம் கழித்து, சுதர்ஸன தாஸ் மற்ற பக்தர்களை லால் சவுக் எனப்படும் முக்கியமான கடைத்தெருவிற்கு அழைத்துச் சென்றார். இந்தியாவிலேயே மிகவும் பதட்டம் நிறைந்த இடம், லால் சவுக். காரிலிருந்து ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களுடன் இறங்கிய பக்தர்கள், திடீரென்று தங்களது மனதை மாற்றி, நாம சங்கீர்த்தனம் செய்ய முடிவு செய்தனர்.

பக்தர்கள் நாம சங்கீர்த்தனத்தைத் தொடங்க, மக்கள் அனைவரும் அதைக் காண ஆர்வத்துடன் கூடினர். கடைக்காரர்கள், வாடிக்கையாளர்கள் என கடைகளில் இருந்தோர் அனைவரும் சங்கீர்த்தனத்தைக் கேட்டு மகிழ்ச்சியுடன் புன்னகைத்தனர். சில முஸ்லீம்களும் அருகில் வந்து சலோம் செய்ய, உற்சாகமடைந்த பக்தர்கள் வரலாற்றுப் புகழ் பெற்ற அவ்வீதியில் தொடர்ந்து கீர்த்தனம் செய்ய, பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி நிறுவனங்களும் அதனைப் படம் பிடித்தனர். முஸ்லீம் பெண்கள் கல்லூரியின் வழியே அவர்கள் சென்றபோது, பல்வேறு மாணவியர்களும் ஆர்வத்துடன் கீர்த்தனத்தை ரசித்தனர். வழிநெடுகிலும் ஆயுதம் தாங்கியபடி பக்தர்களுடன் வந்த CPRF வீரர்கள், கவலையின்றி கீர்த்தனம் செய்யும்படியும் தாங்கள் பாதுகாப்பளிப்பதாகவும் உறுதியளித்தனர்.



டால் ஏரியில் நடைபெற்ற சங்கீர்த்தனத்தின்போது எடுக்கப்பட்ட படம்

நீண்ட நேர கீர்த்தனத்திற்குப் பின், அங்கிருந்து டால் ஏரிக்குச் சென்ற பக்தர்கள் அங்கும் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டனர். காஷ்மீரின் லால் சவுக்கில் நடைபெற்ற கீர்த்தனம் நிச்சயம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய “பகவத் கீதை உண்மையுருவில்,” 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் ஆறு அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **ஏழாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# பூரணத்தின் ஞானம்

## ஆறாம் அத்தியாயத்தின் சுருக்கம்

தியான யோகத்தின் ஆரம்ப நிலையில் செயல் வழியாகவும் உயர் நிலையில் செயல்களைத் துறத்தல் வழியாகவும் உள்ளது என்று கூறிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், மனமே ஒருவனின் நண்பனாகவும் எதிரியாகவும் இருப்பதால், மனதைக் கொண்டு ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றும் தாழ்த்திக் கொள்ளக் கூடாது என்றும் கூறினார். மேலும், இதயத்தில் வசிக்கும் பரமாத்மாவின் மீது தியானம் செய்யும் தியான யோக வழிமுறையும் எடுத்துரைக்கப்பட்டது. கிருஷ்ணரிடமிருந்து அஷ்டாங்க யோகத்தைக் கேட்ட அர்ஜுனன், அதன்படி மனதைக் கட்டுப்படுத்துதல் காற்றைக் கட்டுப்படுத்துவதைக் காட்டிலும் கடினமானது என்று வாதாடினான். மனதைக் கட்டுப்படுத்துதல் நிச்சயமாகவே கடினம் என்று ஏற்றுக்கொண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பயிற்சியின் மூலமாகவும் பற்றின்மையின் மூலமாகவும் மனதைக் கட்டுப்படுத்த முடியும் என்று பதிலளித்தார். யோக முயற்சியில் வெற்றியடையாத யோகியின் நிலை என்ன என்ற கேள்விக்கு, அவர்கள் நல்லோர்களின் குடும்பத்திலோ, செல்வந்தர்களின் குடும்பத்திலோ, யோகிகளின் குடும்பத்திலோ பிறவியெடுப்பர் என்று பதிலளித்த ஸ்ரீ கிருஷ்ணர், எல்லா யோகிகளிலும் பக்தி யோகியே சிறந்தவன் என்று தீர்ப்பளித்தார்.

## ஆறாம் அத்தியாயத்திற்கும் ஏழாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

யோகிகளில் சிறந்தவன் பக்தி யோகியே என்று உரைத்த ஸ்ரீ கிருஷ்ணர் பக்தி யோகத்தினை விளக்கமாக எடுத்துரைக்க ஆரம்பிக்கின்றார். கீதை முழுவதும் பக்தி யோகமே கற்றுத் தரப்படுகிறது என்றபோதிலும், முதல் ஆறு அத்தியாயங்களில் கர்ம யோகம் அதிகமாகவும், இறுதி ஆறு அத்தியாயங்களில் ஞான யோகம் அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது. நடுவில் உள்ள ஆறு அத்தியாயங்கள் முழுவதும் பக்தி யோகத்தை பிரத்யேகமாக எடுத்துரைக்கின்றன. விலைமதிப்புடைய ஒரு பொருளை (உதாரணமாக, வைர நகையை) நாம் மேலும் கீழும் பாதுகாப்பாக உள்ள ஒரு பெட்டியினுள் வைக்கின்றோம். அதுபோல, பக்தி என்னும் உயர்ந்த பொக்கிஷம் ஏழாம் அத்தியாயத்திலிருந்து தொடங்கி பன்னிரண்டாம் அத்தியாயம் வரை மிகவும் விசேஷமாகப் பேசப்பட்டுள்ளது.

## கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டல்

“என்னிடம் பற்றுதல் கொண்ட மனதுடன், என்னைப் பற்றிய முழு

உணர்வில் யோகத்தைப் பயில்வதால், நீ நிச்சயமாக என்னை வந்தடைவாய். இதற்கான வழிமுறையை தற்போது என்னிடமிருந்து கேள்,'' என்று ஏழாம் அத்தியாயத்தினை ஸ்ரீ கிருஷ்ணர் தொடங்குகிறார். பக்தி யோகத்தை எவ்வாறு பயிற்சி செய்து கிருஷ்ணரை அடைவது என்பது குறித்து அறிந்துகொள்ள கிருஷ்ணரிடமிருந்து (அல்லது அவரது பிரதிநிதியிடமிருந்து) கேட்டல் என்பது மிகவும் அவசியம். அவ்வாறு தொடர்ந்து கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதால், ஒருவனின் இதயத்திலுள்ள எல்லா மாசுகளும் களையப்பட்டு அவன் பக்தித் தொண்டில் நிலைபெறுவது மட்டுமின்றி, ஜட வாழ்க்கை என்னும் பந்தத்திலிருந்து விடுபடுகிறான். கிருஷ்ணர் இங்கு பௌதிக உலகம் பற்றிய அறிவையும் தெய்வீக அறிவையும் வழங்குகிறார். இதனை அறிந்த பின்னர் அறிவதற்கு வேறு ஒன்றும் இல்லை. கிருஷ்ணரைப் பற்றிய இந்த உயர் அறிவு அவ்வளவு எளிதில் அடையப்படக் கூடியது அல்ல. பெரும்பாலும், ஆயிரமாயிரம் மனிதர்களில் யாரேனும் ஒருவனே பக்குவமடைய முயற்சி செய்யலாம்; அவ்வாறு முயற்சி செய்து பக்குவமடைந்தவர்களில் யாரேனும் ஒருவரே கிருஷ்ணரே பரம்பொருள் என்னும் உண்மையை அறிந்துகொள்கிறான்.

## கிருஷ்ணரே அனைத்திற்கும் மூலம்

இறை விஞ்ஞானம் என்பது, இறைவனையும் அவரது பல்வேறு சக்திகளையும் அறிவதாகும். இறைவனின் சக்திகளில் ஜட சக்தியும் ஜீவ சக்தியும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய சூட்சும படைப்புகளும் அடங்கியது இறைவனின் ஜட சக்தி எனப்படுகிறது. இந்த ஜட சக்தியின் கலவையினால் ஜடவுலகத்தில் பல்வேறு படைப்புகள் சாத்தியமாகின்றன. தற்காலிகத் தன்மையைக் கொண்ட இந்த ஜட சக்தி கிருஷ்ணரால் படைக்கப்படுவதாகும்—இன்றைய விஞ்ஞானிகள் நினைப்பதுபோல தானாகத் தோன்றியது அல்ல. இந்த ஜட சக்தியைக் காட்டிலும் ஜீவ சக்தி (உயிர்வாழிகளாகிய ஜீவன்கள்) உயர்ந்தது; ஜீவ சக்திக்கும் கிருஷ்ணரே மூலம் என்பதால், ஜீவன்கள் கிருஷ்ணரைச் சார்ந்தவர்கள். சக்தி எப்போதும் சக்திமானால் (சக்தி யாரிடமிருந்து வருகிறதோ அவரால்) கட்டுப்படுத்தப்படுவதுபோல, ஜீவன்கள் எப்போதும் கிருஷ்ணரால் கட்டுப் படுத்தப்படுகிறார்கள். கட்டுப்படுத்தப்படும் ஜீவன்கள் ஒருபோதும் கிருஷ்ணருக்குச் சமமானவர்கள் அல்ல. இந்த இரண்டு சக்திகளின் ஆதியும் அந்தமும் கிருஷ்ணரே, அவரைக் காட்டிலும் உயர்ந்த உண்மை ஏதுமில்லை. நூலில் கோர்க்கப்பட்டுள்ள முத்துக்கள் நூலைச் சார்ந்து இருப்பதைப் போல, அனைத்தும் கிருஷ்ணரைச் சார்ந்துள்ளன. கிருஷ்ணரே பரம்பொருள் என்பதையும் அவரைக் காட்டிலும் உயர்ந்தவர் யாரும் இல்லை என்பதையும் இதிலிருந்து தெளிவாக அறியலாம்.

## கிருஷ்ணரின் சக்திகள்

கிருஷ்ணரே எல்லாவற்றின் காரணமாக உள்ளார்; மேலும், அவரே எல்லாவற்றின் சாரமாகவும் உள்ளார். உதாரணமாக, நீரின் சிறப்பு அதன் தாகத்தைத் தணிக்கும் சுவையில் உள்ளது, சூரிய சந்திரனின் சிறப்பு அதன் ஒளியில் உள்ளது. கிருஷ்ணரே நீரின் சுவையாகவும், சூரிய சந்திரனின் ஒளியாகவும் இருக்கிறார். மேலும், வேத மந்திரங்களின் ஓம்காரமாகவும், ஆகாயத்தின் சப்தமாகவும், மனிதர்களின் திறமையாகவும், நிலத்தின் நறுமணமாகவும், நெருப்பின் வெப்பமாகவும், உயிரினங்களின் உயிராகவும், தவம் புரிபவனின் தவமாகவும், பலசாலியின் பலமாகவும், தர்மத்தின் கொள்கைக்கு விரோதமில்லாத காமமாகவும் என எல்லாவற்றின் முக்கிய அம்சமாகவும் கிருஷ்ணரே இருக்கிறார். இறைவனை நேரடியாக உணர இயலாதவன், அவரை இத்தகு அம்சங்களின் மூலம் உணரலாம். வாழ்க்கையின் அனைத்து நிலைகளும்





சூரிய சந்திரர்களின் ஒளியும்,
நீரின் சுவையும் கிருஷ்ணரே

ஸத்வ, ரஜோ, தமோ குணங்களால் உருவாகின்றன; இம்மூன்று குணங்களும் கிருஷ்ணரின் சக்தியால் படைக்கப்பட்டவையே. இக்குணங்கள் அவரிடமிருந்து தோன்றினாலும், அவர் இக்குணங்களுக்கு உட்பட்டவரல்ல. ஒருவிதத்தில் அவரே எல்லாம் என்றபோதிலும், அவர் முற்றிலும் சுதந்திரமானவர்.

## கிருஷ்ணரே குணங்களைக் கட்டுப்படுத்துகிறார்

உலகம் முழுவதும் முக்குணங்களின் கீழ் மயங்கியிருப்பதால், அவற்றிற்கு அப்பாற்பட்ட கிருஷ்ணரை உலகத்தினர் அறிவதில்லை. ஜட இயற்கையின் குணங்களுக்கு அவர் அப்பாற்பட்டவர் என்பதை உணராமல், அவரும் இயற்கைக்கு உட்பட்டவர் என்று நினைக்கின்றனர். ஒவ்வொருவரும் எத்தகைய குணத்தினால் ஆளப்படுகின்றனர் என்பதை வைத்து, சமுதாயத்தில் பல்வேறு பிரிவினர்கள் உள்ளனர்; அவர்கள் அனைவரும் மாயச் சக்தியினால் மயக்கப்பட்டுள்ளதால், ஜடத் திரைக்குப் பின்னால் கிருஷ்ணர் இருக்கின்றார் என்பதை புரிந்துகொள்வதில்லை. ஜட சக்தி கிருஷ்ண ருடைய தெய்வீக சக்திகளில் ஒன்றாக இருப்பதால், ஜீவன்களால் அதனை வெற்றி கொள்வது என்பது மிகவும் அரிதானதாகும். ஆனால் யாரொருவர் கிருஷ்ணரிடம் சரணடைகின்றாரோ, அவர் வெல்லுவதற்கரிய அந்த மாயையை எளிதில் கடக்க முடியும். கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் ஒருவரை கட்டுப்படாத ஒருவரே விடுவிக்க முடியும்; அதுபோல, ஜட வாழ்வில் சிக்கித் தவிக்கும் நபர்களை கிருஷ்ணரே விடுவிக்க முடியும்.

## கிருஷ்ணரிடம் சரணடையாதவர்கள்

கிருஷ்ணரிடம் சரணடைந்தால் மாயையை எளிதில் கடக்க முடியும்; இருப்பினும், பலர் கிருஷ்ணரிடம் சரணடைவது இல்லை, ஏன்? ஏனெனில், அவர்கள் சற்றும் அறிவற்ற மூடர்களாகவும், மனிதரில் கடைநிலை யோராகவும், மாயையிடம் அறிவை இழந்தவர்களாகவும், அசுரர்களின் நாத்திகத் தன்மையை ஏற்றவர்களாகவும் உள்ளனர். இந்த நான்கு துஷ்டர்களும் கிருஷ்ணரிடம் சரணடைவதில்லை.

**மூடர்கள்:** இவர்கள் இரவு பகலாக கழுதையைப் போன்று புலனின்பத்திற்காக உழைக்கின்றனர். ஆன்மீக விஷயங்களுக்கு 'நேரமில்லை' என்று கூறிவிட்டு, பணப் பைத்தியம் பிடித்து அலையும் முதலாளிகளுக்குத் தொண்டு செய்வதில் இவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர், ஆனால் உன்னத முதலாளியான கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. மனிதக் கழிவுகளை தின்று வாழும் பன்றி, நெய்யாலும் சர்க்கரையாலும் செய்யப்பட்ட இனிப்புகளை மதிப்பதில்லை; அது போல, புலனின்பத்தில் சலிப்பின்றி மூழ்கியிருக்கும் இத்தகு முட்டாள்கள் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதற்கு, நேரம் குறைவாக உள்ளது என்பர்.

**மனிதர்களில் கடைநிலையோர் (நராதமர்):** 84 இலட்சம் உயிரினங்களில் நான்கு இலட்சம் மனித வகையினர் உள்ளனர். அரசியலிலும் சமூகத்திலும் முன்னேற்றம் பெற்றிருந்தாலும், மதம் சார்ந்த விஷயங்களில் முன்னேற்றம் பெறாத மனித வர்க்கத்தினர், 'மனிதரில் கடைநிலையோர்' எனப்படுகின்றனர். கடவுளற்ற மதத்தினை மதமாக ஏற்றுக் கொள்ள முடியாது. மதமற்ற மக்களை மனிதர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. மனிதர்களை தூய்மைப் படுத்துவதற்காக பத்து வகையான சடங்குகள் மனு ஸ்மிருதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சடங்குகளை இன்றைய சமுதாயத்தில் இருக்கும் 99.9 சதவிகித மக்கள் பின்பற்றாமல் இருப்பதால், தற்போதைய சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்கள் மனிதர்களில் கடைநிலையோராக உள்ளனர்.

**மாயையிடம் அறிவை இழந்தவர்கள் (மாயயாபஹ்ருத-க்ஞானி):** நிறைய கல்விகற்று வெளியில் பார்ப்பதற்கு படித்தவர்களைப் போலத் தோன்றினாலும், தங்களது அறிவை மாயையிடம் ஒப்படைத்துவிட்ட நபர்கள் இப்பிரிவில் அடங்குவர். இவர்களுள் சிலர் பகவத் கீதைக்குக்கூட விளக்கமளிக்கலாம். ஆனால் அவர்கள் முறையான சீடப் பரம்பரையில் வராத காரணத்தினால், பரம்பொருள் அருவமானது என்றும், கிருஷ்ணர் சாதாரண நபர் என்றும் பறைசாற்றுவதைக் காணலாம். இத்தகு துஷ்டர்கள் தாங்களும் சரணடைவதில்லை, மற்றவர்களையும் சரணடைய அனுமதிப்பதில்லை.

**அசுரர்கள்:** இவர்கள் வெளிப்படையான நாத்திகர்கள். முழுமுதற் கடவுள் இவ்வுலகில் தோன்ற முடியாது என்று நினைத்து, அவரை எதிர்த்துப் பேசுவதையே வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்டவர்கள்.



கிருஷ்ணரிடம் சரணடையும் நான்கு வித மனிதர்களும், சரணடையாத நான்கு வித மனிதர்களும்

மேற்கூறிய நான்கு பிரிவினரால் கிருஷ்ணரிடம் சரணடைய முடியாது.

### கிருஷ்ணரிடம் சரணடைவோர்

நான்கு வகையான துஷ்டர்கள் இருப்பதைப் போலவே, நான்கு வகையான நல்லோர்களும் உள்ளனர்; இவர்கள் சாஸ்திரங்களின் சட்ட திட்டங்களைப் பின்பற்றி நடப்பதால், இயற்கையாகவே முழுமுதற் கடவுளான கிருஷ்ணரை வழிபடுவர். துன்பத்தில் இருப்பவர்கள், செல்வத்தை விரும்புவோர், கேள்வியுடையோர், ஞானத்தில் சிறந்தவர்கள் ஆகிய நால்வரும் பல்வேறு சூழ்நிலைகளின் காரணத்தினால், கிருஷ்ணருக்கு பக்தி செலுத்த வருகின்றனர். பக்தித் தொண்டின் மூலம் சில பலன்களை அடைய விரும்புவதால், இவர்கள் தூய பக்தர்கள் அல்ல. தூய பக்தித் தொண்டு எந்தவித ஆசைகளும் அற்றதாகும். இருப்பினும், இந்த நல்லோர்களுக்கு தூய பக்தர்களின் சங்கம் கிடைத்தால், இவர்களும் தூய பக்தர்களாக மாற்றம் பெறுவதற்கு அருமையான வாய்ப்பு உண்டு. இந்த நால்வரில், "நான் இந்த உடலல்ல," என்னும் ஞானத்தில் நிலைபெற்றிருக்கும் ஞானியினால், தான் இறைவனின் நித்தியத் தொண்டன் என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடியும் என்பதால், மற்றவர்களைக் காட்டிலும் இவன் சிறந்தவனாக அறியப்படுகிறான். நால்வரையும் உத்தமர்களாக கருதும் இறைவன், ஞானியை தன்னைப் போலக் கருதுகிறார். அத்தகு ஞானி, பற்பல பிறவிகளுக்குப் பின்னர், கிருஷ்ணரே எல்லா காரணங்களுக்கும் காரணமானவர் என்பதை பக்குவமாக அறிந்து, தூய பக்தித் தொண்டினால் அவரிடம் சரணடைகிறான். அத்தகு மகாத்மா மிகவும் அரிதானவன். (தூய பக்தித் தொண்டை நேரடியாக ஏற்றுக் கொள்பவன் பற்பல பிறவிகள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை கவனித்தல் அவசியம்)

### தேவர்களிடம் சரணடைவோர்

இவ்வளவு விளக்கங்களுக்குப் பின்னும் சிலர் கிருஷ்ணரிடம் சரணடைவதற்கு மறுப்புத் தெரிவித்து, தேவர்களிடமும் அருவ பிரம்மனிடமும் சரணடைகின்றனர். அதற்கான காரணத்தையும் அவர்களைப் பற்றிய இதர தகவல்களையும் கிருஷ்ணர் தொடர்ந்து விளக்குகின்றார்.

ஜட ஆசைகளால் (காமத்தினால்) அறிவை இழந்த நபர்கள், தேவர்களைச் சரணடைந்து அதற்கேற்ற நியமங்களை கடைப்பிடிக்கின்றனர். ஒருவன் ஜட ஆசையுடையவனாக இருந்தாலும், அவன் வாஸுதேவரையே தீவிரமாக வழிபட வேண்டும் என்று கூறப்படும் போதிலும், இவர்கள் உடனடி விளைவுகளைப் பெறுவதில் ஆர்வமாக இருப்பதால் பல்வேறு தேவர்களை

## ஏழாம் அத்தியாயத்தின் ஆறு பகுதிகள்

**ஆறாம் அத்தியாயத்துடனான தொடர்பு: 6.47, கிருஷ்ணருடன் இணைந்த பக்தி யோகியே உயர்ந்தவன். பக்தி யோகியாக மாறுவது எப்படி?**

**(1) கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதால் கிருஷ்ணரை அறிதல் (7.1–3)**

கிருஷ்ணரில் மனதை வைத்து, சரணடைந்து கேட்க வேண்டும்.
பௌதிகம், ஆன்மீகம்—இரு அறிவையும் கிருஷ்ணர் வழங்குகிறார்.
மேலும் அறிவதற்கு ஒன்றும் இல்லை, கிருஷ்ணரை அறிபவர் மிகவும் அரிது.

**(2) பௌதிகம், ஆன்மீகம்—இரண்டிற்கும் கிருஷ்ணரே மூலம் (7.4–12)**

எட்டு பௌதிகப் படைப்புகளும் கிருஷ்ணரின் சக்தியே.
உயர்ந்த ஜீவ சக்தியும் கிருஷ்ணரின் சக்தியே.
கிருஷ்ணர் இரு சக்திகளைக் காட்டிலும் உயர்ந்தவர்; இரண்டிற்கும் மூலம்.
கிருஷ்ணரே அனைத்தின் முக்கிய அம்சம்.

**(3) கிருஷ்ணரிடம் சரணடைதல் (7.13–14)**

கிருஷ்ணரின் தெய்வீக சக்தியான மாயையை வெல்லுதல் மிகவும் கடினம்.
கிருஷ்ணரிடம் சரணடைவோர் எளிதில் கடக்கலாம்.

**(4) சரணடையாதவர்களும் சரணடைபவர்களும் (7.15–19)**

மூடர்கள், மனிதரில் கடைநிலையோர், மாயையிடம் அறிவை இழந்தோர், அசுரர்கள் ஆகிய நால்வரும் கிருஷ்ணரிடம் சரணடைவதில்லை.
துன்பத்தில் இருப்போர், செல்வம் வேண்டுவோர், கேள்வியுடையோர், ஞானிகள் ஆகிய நால்வரும் கிருஷ்ணரை வழிபடுகின்றனர்.
ஞானியே சிறந்தவன், பற்பல பிறவிகளுக்குப் பின் முற்றிலுமாக கிருஷ்ணரிடம் சரணடைகிறான்; அத்தகு மகாத்மா மிகவும் அரிது.

**(5) தேவர்களை வழிபடுவோர், அருவவாதிகள் (7.20–25)**

குறைபுத்தியுடையோர் தேவர்களை வழிபடுவர்.
கிருஷ்ணரே பலன்களை வழங்குகிறார், ஆனால் தற்காலிகமானது.
பரம்பொருள் அருவமானது என்போர் பெரிய முட்டாள்கள்; கிருஷ்ணர் தன்னை அவர்களிடமிருந்து மறைத்துக் கொள்கிறார்.

**(6) மயக்கமும் முக்தியும் (7.26–30)**

கிருஷ்ணர் அனைத்தையும் அறிந்தவர்.
விருப்பு வெறுப்பின் இருமையினால் ஜீவன் துன்பப்படுகிறான்.
பற்பல பிறவிகளில் நற்செயல்கள் செய்தோர் உறுதியான பக்தித் தொண்டை அடைய முடியும்.

அணுகுகின்றனர். பல்வேறு பலன்களைப் பெறுவதற்கு வெவ்வேறு தேவர்களை வழிபடும்படி வேதங்களில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதை ஏற்று, இவர்கள் அத்தகு வழிபாட்டில் ஈடுபடும்போது, பரமாத்மாவாக எல்லோரின் இதயத்திலும் வீற்றுள்ள கிருஷ்ணர், இவர்களது நம்பிக்கையை பலப்படுத்துகிறார். தேவர்களால் வழங்கப்படும் நன்மைகள் யாவும் உண்மையில் கிருஷ்ணரால் வழங்கப்படுபவையே. ஆனால் அற்ப புத்தியுடைய இவர்கள் தொடர்ந்து தேவர்களை வழிபடுவதால், தேவர்களின் லோகங்களுக்குச் செல்வர்; கிருஷ்ணரை வழிபடுவோர் அவரது தெய்வீக உலகை அடையலாம்.

தேவர்களை வழிபடுவோரும் பரம இலக்கை (முக்தியை) அடைய முடியும் என்று சிலர் கூறுவதுண்டு; ஆனால் கீதையின் கருத்துப்படி அது சாத்தியமல்ல என்பதை இங்குக் காண்கிறோம். உடலுக்கு உணவூட்ட வேண்டுமெனில், வயிற்றுக்குத்தான் உணவளிக்க வேண்டுமேயொழிய கண்கள், காதுகள் என எல்லா பக்கங்களிலும் உணவை வழங்கினால் அது பயன்தராது. (சூரியன், சந்திரன், விநாயகர் போன்றவர்கள் மட்டுமின்றி, சிவபெருமான், பிரம்மதேவர் உட்பட) தேவர்களை வழிபடுவதால் கிடைக்கப்பெறும் பலன்கள் தற்காலிக மானவை; ஏனெனில், அவர்கள் செல்லும் தேவ லோகமும் அங்குள்ள தேவலோக வாசிகளும்கூட தற்காலிகமானவர்கள் ஆயிற்றே.



பௌதிக ஆசைகளில் மயங்கியோர் தேவர்களை வழிபடுவர்; அவர்கள் அடையும் பலன்கள் கிருஷ்ணரால் கொடுக்கப்படுபவையே.

## அருவவாதத்தைப் பின்பற்றுவோர்

பகவத் கீதையானது கிருஷ்ணர் என்னும் ஒரு குறிப்பிட்ட நபரால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது; இங்கு தானே பரம்பொருள் என்பதை கிருஷ்ணர் பல்வேறு இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால் அறியாமையில் மூழ்கியுள்ள சிலர், இறைவனுக்கு உண்மையான உருவம் கிடையாது என்றும், அவர் இவ்வுலகில் அவதரிக்கும்போது மட்டுமே உருவத்தை ஏற்று வருகிறார் என்றும் கூறுகின்றனர். அத்தகையோர் கீதையில் *அபுத்தய:,* புத்தியில்லாதவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அழிவற்ற மிகவுயர்ந்த கிருஷ்ணரின் பரம இயற்கையை அவர்கள் அறியார்கள். இவர்கள் வேதாந்த சூத்திரம், உபநிஷத் என பற்பல சாஸ்திரங்களைப் படித்தாலும், பக்தி இல்லாத காரணத்தினால் இவர்களால் இறைவனைப் புரிந்துகொள்ள முடியாது. அருவப் பிரம்மன், பரமாத்மா, பகவான் என மூன்று நிலைகளில் பரம்பொருள் உணரப்படுவதாக அறிகிறோம். பரம்பொருளின் இறுதி நிலை, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே. இதைப் புரிந்துகொள்ளாத மூடர்கள், கிருஷ்ணரின் உடல் ஜடத்தினால் ஆனது என்றும், அவரது லீலைகள், ரூபம் என அனைத்தும் மாயை என்றும் எண்ணுகின்றனர். அத்தகு மூடர்களுக்கு அவர் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்துவதில்லை; அவர் தனது அந்தரங்க சக்தியால் தன்னை மறைத்துக் கொள்வதால், பிறப்போ அழிவோ அற்ற இறைவனை அவர்கள் அறிவதில்லை.

## மயக்கமும் முக்தியும்

அறிவற்றோர் கிருஷ்ணரை அறிய முடிவதில்லை; ஆனால் கிருஷ்ணரோ அனைத்தையும் அறிந்தவர். கடந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் என அனைத்தையும் அவர் அறிவார்; அனைத்து ஜீவன்களையும் அவர் அறிவார், ஆனால் அவரை முழுமையாக அறிந்தோர் யாருமில்லை. கிருஷ்ண உணர்வில் ஈடுபடுவோர் மட்டுமே அவரை அறிய முடியும், அத்தகு ஜீவன்கள் மிகவும் அரிது. பொதுவாக உயிர்வாழிகள் அனைவரும், விருப்பு வெறுப்பினால் பாதிக்கப்பட்டு, மான அவமானம், இன்ப துன்பம், ஆண் பெண், நல்லது கெட்டது போன்ற இருமைகளில் மயங்கியுள்ளதால், மிகுந்த குழப்பத்துடன் இவ்வுலகில் வசித்து வருகின்றனர். அத்தகு நபர்கள் பல்வேறு பிறவிகளில் நற்காரியங்களைச் செய்து, பக்தர்களின் கருணையைப் பெறும்போது, பாவங்கள் அனைத்தும் விலகி, கிருஷ்ண பக்தியில் உறுதியான நிலையை அடைகின்றனர். முதுமையிலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுபட்டு முக்தியடைய விரும்பும் அறிவுடையோரும் கிருஷ்ணரிடம் சரணடைகின்றனர். திவ்யமான செயல்கள் அனைத்தையும் அறிந்திருப்பதால், அவர்கள் பிரம்மன் எனப்படுகின்றனர். மேலும், ஜட இயற்கை, தேவர்கள், யாகங்கள் என எல்லாவற்றையும் ஆளும் பரம புருஷராக கிருஷ்ணரை அறிந்து, அவரிடம் பக்தி செய்பவர்கள் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவரையே நினைத்து அவரை அடைகின்றனர்.

*திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள்,*
*பகவத் தரிசனம் பத்திரிகை உட்பட*
*பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின்*
*வெளியீடுகளுக்குத் தொகுப்பாசிரியராகத்*
*தொண்டாற்றி வருகிறார்.*

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் 10

*காமஸ்ய னேந்த்ரிய-ப்ரீதிர் லாபோ ஜீவேத யாவதா*
*ஜீவஸ்ய தத்த்வ-ஜிக்ஞாஸா நார்தோ யஷ் சேஹ கர்மபி:*

### மொழிபெயர்ப்பு

வாழ்வின் விருப்பங்கள் ஒருபோதும் புலனின்பத்தை நோக்கி செலுத்தப்படக் கூடாது. ஒருவர் ஆரோக்கிய வாழ்விற்கு அல்லது சுய பராமரிப்புக்கு மட்டுமே ஆசைப்பட வேண்டும்; ஏனெனில், மனிதன் பரம்பொருளைப் பற்றிய விசாரணையில் ஈடுபட வேண்டியவன். வேறெதுவும் அவனது கர்மத்தின் நோக்கமாக இருக்கக் கூடாது.

### பொருளுரை

முற்றிலும் குழம்பிய நிலையிலுள்ள பௌதிக நாகரிகம், புலனின்பங்களில் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், தவறான வழியில் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நாகரிகத்தின் எல்லா தரப்பட்ட வாழ்விலும் புலனின்பமே இறுதி நோக்கமாக உள்ளது. அரசியல், சமூகத் தொண்டு, பொது நலம், மற்றும் மதம் மட்டுமின்றி, முக்தியிலும்கூட புலன்களைத் திருப்திப்படுத்தும் இந்நோக்கமே மேலோங்கி இருக்கிறது. அரசியல் களத்திலுள்ள தலைவர்கள் தத்தமது சொந்த புலனின்பத்தை நிறைவேற்றுவதற்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். தங்களது பெயரளவிலான தலைவர்கள் புலனின்பங்களை நிறைவேற்றுவதாக உறுதியளிக்கும்பொழுது மட்டுமே, வாக்காளர்கள் அவர்களை மதிக்கின்றனர். தங்களது சொந்த புலனின்பத்தில் வாக்காளர்கள் அதிருப்தி அடைந்தவுடன், தலைவர்களை பதவியிலிருந்து விலக்கிவிடுகின்றனர். தலைவர்கள் தங்களது வாக்காளர்களின் புலன்களுக்கு அதிருப்தியைக் கொடுத்து அவர்களை எப்போதும் விரக்தியடையச் செய்வது உறுதி. இது மற்ற எல்லா துறைகளுக்கும் பொருந்தக்கூடியது; வாழ்வின் பிரச்சனைகளுக்கு யாரும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. முக்தி மார்க்கத்தில் உள்ளவர்களும்கூட பிரம்மனில் இரண்டறக் கலக்க ஆவல் கொண்டு, அத்தகு புலனின்பத்திற்காக ஆன்மீகத் தற்கொலை செய்துகொள்ள விரும்புகின்றனர். ஆனால் பாகவதமோ ஒருவன் புலனின்பத்திற்காக வாழக் கூடாது என்று கூறுகின்றது. உடல் பராமரிப்பிற்குத் தேவையான அளவு மட்டுமே ஒருவன் புலன்களைத் திருப்திப்படுத்த வேண்டும், புலனின்பத்திற்காக அல்ல. புலன்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு திருப்தி தேவைப்படுகிறது. இவ்வுடல் புலன்களால் உருவாக்கப்பட்டிருப்பதால், அப்புலன்களைத் திருப்தி செய்வதற்கென்று சில ஒழுங்குமுறைகள் உள்ளன. ஆனால், புலன்கள் கட்டுப்பாடற்ற இன்பத்திற்கானவை அல்ல. உதாரணமாக, திருமணம் அல்லது ஆணும் பெண்ணும் இணைதல் என்பது, குழந்தைகளைப் பெறுவதற்கு மட்டுமே, புலனுகர்ச்சிக்காக அல்ல. சுயக் கட்டுப்பாடு இல்லாததால், குடும்பக் கட்டுப்பாட்டிற்கான பிரச்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் பரம்பொருளை தேடிச் செல்லும் முயற்சியில், குடும்பக் கட்டுப்பாடு தானாகவே அடையப்படுகிறது என்பதை முட்டாள்கள் அறிவதில்லை. பரம உண்மையைத் தேடுவோர் புலனுகர்ச்சியின் தேவையற்ற ஈடுபாடுகளில் ஒருபோதும் கவரப்படுவதில்லை; ஏனெனில், பரம்பொருளைத் தேடும் உறுதியுள்ள மாணவர்கள் உண்மையை ஆய்ந்தறியும் பணியில் எப்போதும் மூழ்கியுள்ளனர். ஆதலால், வாழ்வின் எல்லா தருணத்திலும், பரம உண்மையைத் தேடுவதே இறுதி முடிவாக இருக்க வேண்டும்; இத்தகு ஈடுபாடு ஒருவனை மகிழ்ச்சியாக வைத்திருக்கும். ஏனெனில், அவன் பலதரப்பட்ட புலனின்பங்களில் குறைவாகவே ஈடுபடுவான். அந்த பரம்பொருள் அடுத்ததாக விளக்கப்பட்டுள்ளது.

### ஸ்லோகம் 11

*வதந்தி தத் தத்த்வ-விதஸ் தத்த்வம் யஜ் க்ஞானம் அத்வயம்*
*ப்ரஹ்மேதி பரமாத்மேதி பகவான் இதி சப்த்யதே*

### மொழிபெயர்ப்பு


பரம்பொருளை அறிந்த கற்றறிந்த ஆன்மீகிகள் இந்த இரண்டற்ற மெய்ப்பொருளை பிரம்மன், பரமாத்மா அல்லது பகவான் என்று அழைக்கின்றனர்.

### பொருளுரை

பரம்பொருள் எல்லாமாகவும் எல்லாவற்றின் இலக்காகவும் உள்ளார், இங்கு குணத்தால் வேற்றுமை கிடையாது. எனவே, பிரம்மன், பரமாத்மா, பகவான் ஆகியவை தன்மையில்

ஒன்றானவை. ஒரே மெய்பொருள், உபநிஷதங்களின் மாணவர்களால் அருவ பிரம்மன் என்றும், ஹிரண்யகர்பர்கள் அல்லது யோகிகளால் இதயவாசியான பரமாத்மா என்றும், பக்தர்களால் பகவான் என்றும் உணரப்படுகின்றது. வேறுவிதமாகக் கூறினால், பகவான் அல்லது பரம புருஷரே பரம்பொருளைக் குறிக்கும் இறுதிச் சொல்லாகும். பரமாத்மா, பரம புருஷரின் ஒரு பகுதியின் பிரதிநிதித்துவமாக உள்ளார்; அருவப் பிரம்மன், பரம புருஷரிலிருந்து வரும் பிரகாசமான ஒளியாகும். பரம புருஷருக்கும் அருவப் பிரம்மனுக்கும் உள்ள உறவு சூரிய தேவனுக்கும் சூரியக் கதிர்களுக்கும் உள்ள உறவைப் போன்றது. மேற்கூறிய பிரிவுகளைச் சேர்ந்த குறைமதியுடைய மாணவர்கள், சிலசமயங்களில் தங்களுடைய சொந்த உணர்வுகளே சரி என்று வாதிடுவர். ஆனால் பரம்பொருளை பூரணமாக அறிந்தவர்களோ, இப்பிரிவுகள் ஒன்றேயான பரம்பொருளின் மூன்று அம்சங்கள் என்பதையும், வெவ்வேறு கோணங்களிலிருந்து காணப்படும் வேறுபட்ட தோற்றங்களே என்பதையும் நன்கறிவர்.

பாகவதத்தின் முதல் அத்தியாயத்தின் முதல் ஸ்லோகத்தில், பரமசத்தியமானது தன்னில் நிறைவு கொண்டது, அனைத்தையும் அறியும் ஆற்றல் பெற்றது, மாயையிலிருந்து விடுபட்டது என்று விளக்கப்பட்டுள்ளது. வேற்றுமையைக் கொண்ட மாயையின் இவ்வுலகில், அறிபவர் அறியப்படுவதிலிருந்து வேறுபட்டவர். ஆனால் பரம சத்தியத்தில், அறிபவரும் அறியப்படுவதும் ஒன்றே. வேற்றுமை கொண்ட இவ்வுலகில், ஆத்மா என்னும் உயர்சக்தி அறிபவராகவும், அசைவற்ற ஜடம் எனப்படும் தாழ்ந்த சக்தி அறியப்படுவதாகவும் உள்ளது. எனவே, உயர் சக்தி, தாழ்ந்த சக்தி என்னும் இருமை இவ்வுலகில் உள்ளது; ஆனால் பரலோகத்திலோ அறிபவர், அறியப்படுவது ஆகிய இரண்டுமே உயர்ந்த சக்தியைச் சார்ந்தவை. எல்லா சக்திகளின் ஆதாரமான பரம புருஷரிடம் (சக்திமானிடம்) மூவகையான சக்திகள் உள்ளன. சக்திக்கும் சக்திமானுக்கும் வேறுபாடு கிடையாது, ஆனால் அச்சக்திகளின் தன்மையில் வேறுபாடு உண்டு. ஆன்மீக உலகமும் ஜீவன்களும் உயர்சக்தியைச் சேர்ந்தவை, ஆனால் ஜடவுலகமோ தாழ்ந்த சக்தியைச் சார்ந்தது. தாழ்ந்த சக்தியுடன் தொடர்பு கொண்டுள்ள ஜீவன், தான் தாழ்ந்த சக்தியைச் சார்ந்தவன் என்ற எண்ணத்தின் அறியாமையில் உள்ளான். ஆகவே, ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலையினை ஜடவுலகில் காண்கிறோம். பூரணத்தைப் பொறுத்தவரையில், அறிபவருக்கும் அறியப்படுவதற்கும் இடையில் அத்தகைய வேற்றுமை உணர்வு இல்லாததால், அங்குள்ள அனைத்துமே பூரணமானது.



அருவப் பிரம்மன், இதயவாசியான பரமாத்மா, பரம புருஷரான ஸ்ரீ கிருஷ்ணர் ஆகிய மூன்று நிலைகளில் பரம்பொருள் உணரப்படுகிறது

## ஸ்லோகம் 12

*தச் ச்ரத்ததானா முனயோ க்ஞான-வைராக்ய-யுக்தயா*
*பஷ்யந்த்யாத்மனி சாத்மானம் பக்த்யா ஷ்ருத-க்ரிஹீதயா*

## மொழிபெயர்ப்பு

தீவிர ஆர்வம் கொண்டுள்ள மாணவர் அல்லது முனிவர், ஞானத்திலும் துறவிலும் நன்கு நிலைபெற்று, வேதாந்த ஸ்ருதியிலிருந்து தாம் கேள்விப்பட்டதற்கு ஏற்ப பக்தித் தொண்டாற்றுவதன் மூலம் பரம்பொருளை அறிகிறார்.

## பொருளுரை

பரம்பொருளை பூரணமாக அறிய பகவான் வாஸுதேவருக்கு பக்தித் தொண்டு புரிய வேண்டும்; பரம புருஷரான அவர் பரம்பொருளின் இறுதி நிலையாவார். பிரம்மன் என்பது அவரது உன்னத உடலிலிருந்து தோன்றும் பிரகாசமாகும், பரமாத்மாவோ அவரது ஒரு பகுதியின் பிரதிநிதியாக இருப்பவர். எனவே, பரம்பொருளை பிரம்மன் அல்லது பரமாத்மாவாக உணர்வது என்பது முழுமை பெறாத தன்னுணர்வாகும். நான்கு வகையான மனிதர்கள் உள்ளனர்—கர்மிகள், ஞானிகள், யோகிகள், மற்றும் பக்தர்கள். கர்மிகள் லௌகீகவாதிகளாகவும், மற்ற மூன்று பிரிவினரும் ஆன்மீகவாதிகளாகவும் அறியப்படுகின்றனர். இவர்களில் பரம புருஷரை உணர்ந்தவர்களான பக்தர்களே முதல் தரமான ஆன்மீகிகள் ஆவர். பரம புருஷரின் ஒரு பகுதியை மட்டுமே உணர்ந்துள்ளவர்கள் இரண்டாம் தரமான ஆன்மீகிகள் ஆவர். பரம புருஷரின் ஆன்மீக நிலையை துளியளவு மட்டுமே

உணர்ந்தவர்கள் மூன்றாம் தர ஆன்மீகிகள் ஆவர். பரம புருஷர் பக்தித் தொண்டினால் உணரப்படுகிறார் என்றும், அந்த பக்தித் தொண்டிற்கு பூரண ஞானமும் பௌதிக சங்கத்தின் துறவும் பக்கபலமாக இருக்கின்றன என்றும் பகவத் கீதையிலும் பிற வேத இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது. ஞானமும் பௌதிக சங்கத்தின் துறவும் பக்தித் தொண்டை தானாகவே பின்தொடரும் என்பதை நாம் முன்பே விவரித்துள்ளோம். பிரம்மனையும் பரமாத்மாவையும் உணர்வது என்பது, பரம்பொருளின் பக்குவமற்ற உணர்வு நிலையாக இருப்பதால், இவற்றின் வழிகளும், அதாவது ஞான மார்க்கமும் யோக மார்க்கமும்கூட பரம்பொருளை உணர்வதற்கான பக்குவமற்ற வழிகளே. பௌதிக சங்கத்தின் துறவையும் பூரண ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டு, வேதாந்த ஸ்ருதியை செவி கொடுத்துக் கேட்பதால் உறுதியடையும் பக்தித் தொண்டு மட்டுமே பரம்பொருளை அறிவதில் தீவிர ஆர்வம் கொண்டுள்ள மாணவனுக்குரிய பக்குவமான வழிமுறையாகும். எனவே, பக்தித் தொண்டு புத்தியில் தாழ்ந்த ஆன்மீகிகளுக்கு உரியதல்ல. பக்தர்களுக்கிடையில் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என்று மூன்று நிலைகள் உள்ளன. ஆரம்ப நிலையிலுள்ள மூன்றாம் நிலை பக்தர்கள், ஞானம் இல்லாதவர்களாகவும் பௌதிக சங்கத்திலிருந்து விலகாதவர்களாகவும் இருப்பர், ஆனால் கோவிலிலுள்ள விக்ரஹத்தை வழிபடுதல் என்னும் ஆரம்ப நிலை வழிபாட்டு முறைகளில் கவரப்படுகின்றனர்; இவர்கள் லௌகீக பக்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். லௌகீக பக்தர்கள் தெய்வீக இலாபத்தைக் காட்டிலும் பௌதிக இலாபங்களில் அதிகப் பற்றுதல் கொண்டுள்ளனர். எனவே, லௌகீக பக்தித் தொண்டிலிருந்து இரண்டாம் நிலைக்கு முன்னேற வேண்டியது மிகவும் அவசியம். இரண்டாம் நிலையில் இருக்கும் பக்தனால், பரம புருஷர், அவரது பக்தர்கள், அறியாமையில் உள்ளவர்கள், பொறாமை கொண்டவர்கள் ஆகிய பக்தி வாழ்வின் நான்கு அம்சங்களைக் காண முடியும். ஒருவர் தன்னை குறைந்தபட்சம் இரண்டாம் நிலை பக்தராக உயர்த்திக் கொண்டு, பரம்பொருளை அறிவதற்கு தகுதியுடையவராக வேண்டும்.

எனவே, மூன்றாம் நிலை பக்தரொருவர் பாகவதத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட மூலத்திடமிருந்து பக்தித் தொண்டைப் பற்றிய உபதேசங்களைப் பெற வேண்டும். பக்தித் தொண்டில் நிலைபெற்றுள்ள பக்தர் ஒரு பாகவதமாகவும், பகவானின் செய்திகளைத் தாங்கிய புத்தகம் மற்றொரு பாகவதமாகவும் உள்ளது. மூன்றாம் நிலை பக்தரொருவர், பக்தித் தொண்டின் நெறிகளை அறிய பக்த-பாகவதரிடம் செல்ல வேண்டும். அத்தகைய பக்த-பாகவதர் தனது வயிற்றுப் பிழைப்புக்காக பாகவதத்தை வைத்து வியாபாரம் செய்யும் கைதேர்ந்த நபரல்ல. அவர் சூத கோஸ்வாமியைப் போன்று சுகதேவ கோஸ்வாமியின் பிரதிநிதியாக இருந்து, எல்லோருடைய எல்லா நன்மைக்காகவும் பக்தித் தொண்டு என்னும் மார்க்கத்தை பிரசாரம் செய்பவராக இருக்க வேண்டும். (தொடரும்)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(ஜுலை 1, 2011 முதல் ஆகஸ்ட் 15, 2011 வரை)**

### ஜுலை

1, வெள்ளி, ஸ்ரீ கதாதர பண்டிதர் மறைவு நாள்
ஸ்ரீல பக்திவினோத தாகூர் மறைவு நாள்

3, ஞாயிறு, பூரி ஜகந்நாதர் ரதயாத்திரை
ஸ்ரீ ஸ்வரூப தாமோதர கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ சிவானந்த சேனர் மறைவு நாள்

11, திங்கள், ரதம் திரும்ப வரும் நாள்
சயன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:59–10:13

15, வெள்ளி, குரு பூர்ணிமா
ஸ்ரீல சனாதன கோஸ்வாமி மறைவு நாள்
சாதுர்மாதத்தின் முதல் மாத தொடக்கம்
(கீரை வகைகளிலிருந்து விரதம்)

20, புதன், ஸ்ரீல கோபாலபட்ட கோஸ்வாமி மறைவு நாள்

23, சனி, ஸ்ரீல லோகநாத கோஸ்வாமி மறைவு நாள்

26, செவ்வாய், கமிக ஏகாதசி விரதம்,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 09:58–10:15

### ஆகஸ்ட்

3, புதன், ஸ்ரீ ரகுநந்தன தாகூர் மறைவு நாள்,
ஸ்ரீ வம்சிதாஸ பாபாஜி மறைவு நாள்

9, செவ்வாய், ராதா கோவிந்த ஊஞ்சல் உற்சவம்,
பவித்ரோபன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04–10:15
ஸ்ரீல ரூப கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல கௌரிதாஸ பண்டிதர் மறைவு நாள்

12, வெள்ளி, முதல் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

13, சனி, ஊஞ்சல் உற்சவத்தின் நிறைவு நாள்,
பலராமரின் அவதாரத் திருநாள் (மதியம் வரை விரதம்)
சாதுர்மாதத்தின் இரண்டாம் மாதம் ஆரம்பம்
(தயிர் வகைகளிலிருந்து ஒரு மாதம் விரதம்)

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net


**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.






# பகவத் தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க

Back to Godhead

பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது

**உங்கள் இல்லம் தேடி!**

## நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: பகவத் தரிசனம், ISKCON, 7c, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553




## தங்கள் சந்தாவை புதுப்பியுங்கள்

பகவத் தரிசனத்திற்கான தங்களது சந்தா எப்போது முடிவடைகிறது என்று தங்களுக்குத் தெரியுமா? பகவத் தரிசனம் தங்களை வந்து சேரும்போது, அதன் உறையிலுள்ள தங்களது முகவரியின் வலதுபுறத்தில் சந்தா முடிவுறும் மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கவனித்து, தங்கள் சந்தா முடிவுறுவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முன்பு **ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்** என்று அறியப்பட்ட இப்பத்திரிகை, தற்போது **பகவத் தரிசனம்** என்ற பெயரில் வலம் வருகிறது; வேறு மாற்றங்கள் ஏதுமில்லை.

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்

அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

இராஜபாளையம்

813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.

போன்: 04563 225553

திண்டுக்கல்

1, சாலை ரோடு, திண்டுக்கல்.

போன்: 0451 2440553

காரைக்குடி

333, செக்காலை ரோடு, காரைக்குடி.

போன்: 04565 400553

தேனி

1244, பெரியகுளம் ரோடு, தேனி.

போன்: 04546 251553

இராமநாதபுரம்

262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.

போன்: 04567 225553

சிவகாசி

144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.

போன்: 04562 278553

தூத்துக்குடி

351, WGC. ரோடு, தூத்துக்குடி

போன்: 0461 2337553